பக்கங்கள்: 16

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2051 | தை 19 | ஞாயிற்றுக்கிழமை 02.02.2020 | கதிர் 88

### இது ரகசியம் அல்ல!

ஓர் உறைக்குள் பல வாள்கள் இருக்க முடியாது என்பார்கள்.

கூட்டமைப்புக்கு மாற்று அணி விவகாரத்திலும் அதுதான் நிலைமை போலும். ஏற்கனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனி வழி புறப்பட்டுவிட்டது. தாமே உண்மையான பக்கம் 02

# விக்கி கூட்டணி பிளவடைந்தது!

## தனி வழியில் சிறிகாந்தா, சிவாஜி


கொழும்பு, பெப். 02

தமிழ் தேசியக் கட்சி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான என். சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

நல்லூர்ப் பகுதியில் அமைந்துள்ள தமிழ் தேசியக் கட்சி அலுவலகத்தில் நேற்றுத் தாம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பக்கம் 03

## யாழ். ஆயருடன் நேற்று அங்கஜன் எம்.பி. சந்திப்பு



யாழ்ப்பாணம், பெப். 02

யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பக்கம் 03

## சிறந்ததொரு ஜனாதிபதியை நாங்கள் நீண்ட நாள்களின் பின் பெற்றுறோம்

### ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கருத்து

கொழும்பு,பெ ப்.02

சிறந்த ஒரு ஜனாதிபதியை நீண்ட நாள்களுக்கு பின்னர் பெற்றிருக்கிறோம். இந்த ஜனாதிபதி சொல்வதை செய்யக் கூடிய தைரியமான ஆளுமை மிக்கவர். எனவே தேர்தல் காலங்களில் மக்களிடம் பொய்யான பிரசாரங்களை செய்தவர்கள் கண்ணாடி முன்னர் நின்று சுயபரிசோதனை பக்கம் 03

## புலிகளும் போர்க் குற்றம் புரிந்தனர்; ஜெனிவாவில் முறைப்பாடு பதிவானது

ஜெனிவா, பெப்.02

இலங்கையில் மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளும் போர்க் குற்றம் புரிந்துள்ளார்களென ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாதம் இறுதியில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் 43 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் விசேட அதிரடிப்படையின் முன்னாள் அதிகாரியான ஜெனட் விமல என்பவரே விடுதலைப்புலிகள் மீது இவ்வாறானதொரு முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது வருமாறு:- பக்கம் 02

# காணாமற்போன தமிழர்கள் எவருமே உயிருடனில்லை!

## இலங்கை மீது நடவடிக்கை எடுக்க ஐ.நாவிடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்தல்

கொழும்பு,பெப்.02

போரின் இறுதிக்கட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழர்கள் எவரும் இப்போது உயிருடனில்லை என்ற சிறிலங்கா அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ கூற்று தொடர்பில் நடவடிக்கை எடுக்கக் கோரி ஐ.நாவிடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

2009 இல் தமிழின அழிப்பு போரின்போது, இலங்கைஇராணுவநடவடிக்கைகளின்கண்காணிப்பாளராக இருந்தவர் என்பதோடு, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் நிரந்தரச் செயலராகவும் இருந்தவர் கோட்டாபய ராஜபக்ஷ. கடந்த ஜனவரி 20ஆம் திகதியன்று பி.பி.சி செய்திச்சேவைக்கு வழங்கிய செவ்வியிலே காணாமலாக்கப்பட்ட தமிழர்கள் எவரும் இப்போது உயிருடனில்லை என அவர் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாக வைத்து ஏழு கோரிக்கைகளை ஐ.நாவிடம் நாடுகடந்த தமிழீழ பக்கம் 03

## கொழும்பு வரும் ரஷ்ய ஜெனரல்!

கொழும்பு, பெப். 02

ரஷ்யாவின் இராணுவப் பிரதானி ஜெனரல் ஒலிக் செலிகோவ் நாளை 3 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார். இலங்கை வரும் ரஷ்ய இராணுவப் பிரதானி அன்றைய தினமே பத்தரமுல்லையில் உள்ள இராணுவ நினைவிடத்திற்குச் செல்கிறார். அங்கிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர இராணுவத் தலைமையகத்திற்கு விஜயம் செய்ய உள்ளார் எனத் தெரியவருகிறது.

ஜெனரல் செலிகோவ் ரஷ்ய இராணுவத்தின் காலாட்படையின் பிரதான கட்டளை அதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார். (ஐ)

## தேசிய கீதத்தை தமிழ்மொழியில் பாடினால் தமிழீழம் மலருமாம்!

கொழும்பு, பெப். 06

இலங்கை சிங்கள - பௌத்த நாடு என்பதால் தேசிய கீதம் சிங்கள மொழியில் பாடப்பட்டே ஆகவேண்டும். அதைத் தமிழ் மொழியில் பாடினால் இந்த நாட்டில் இரண்டு பிரிவினர் இருக்கின்றார்கள் என்று அர்த்தப்படும். அந்த அர்த்தம் தனி நாடு உருவாகுவதற்கு - பிரபாகரன் விரும்பிய தமிழீழம் மலர்வதற்கு -வழிவகுக்கும் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

## டக்ளஸும், தொண்டமானும் மஹிந்தவுடன் இந்தியாவுக்கு

கொழும்பு, பெப். 03

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 8 ஆம் திகதி இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது மீனவர்களின் பிரச்சினைக் குத் தீர்வு காண்பது தொடர்பாக பேச்சு நடத்தப்பட உள்ளதாகக் கூறுப்படுகிறது. அதனால் இந்த பக்கம் 03

## தரித்து நின்ற லொறி திடீரென தீப் பற்றி எரிந்தது; சாரதி பலி!

### தம்பலகாமத்தில் அதிகாலை சம்பவம்



திருகோணமலை,பெப்.02

கொழும்பிலிருந்து பயணித்த வாகனமொன்று நேற்று அதிகாலை திடீரெனத் தீப்பிடித்து எரிந்துள்ளது. அதில் ஒருவர் பலியானார்.

பக்கம் 02

## 'கிராமத்துக்கு ஒரு வீடு' திட்டம் மஹிந்தவால் ஆரம்பித்துவைப்பு

நாடுமுழுவதும் குறைந்த வருமானம் பெறும் 14 ஆயிரத்து 22 குடும்பங்களுக்காக அமைக்கப்படவுள்ள 'கிராமத்துக்கு ஒரு வீடு – நாட்டுக்கு எதிர்காலம்' (கமட்ட கெயக் - ரட்டட்ட ஹெட்டக்) என்ற வீடமைப்பு திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நேற்றுக் காலை ஆரம்பமாகின.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பக்கம் 03

## புதிய சோதனைச் சாவடியால் குருமன்காட்டில் பதற்ற நிலை!

வவுனியா, பெப்.02

வவுனியா - குருமன்காட்டுச் சந்தியில் நேற்றுக் காலை 7.00 மணி முதல் இராணுவத்தினர் சோதனைச்சாவடி அமைத்து சோதனைநடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

திடீரென அமைக்கப்பட்ட சோதனைச் சாவடி காரணமாக குருமன்காட்டுச் சந்தியில் சற்றுப் பதற்றமான நிலை காணப்படுகிறது. மக்கள் அச்சத்துடன் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். (விவரமான செய்தி 4ஆம் பக்கத்தில்) பக்கம் 03

காலைக்கதிர்
Kalaikathir



# தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டால் தனிநாடு கோரும் நிலை ஏற்படும்

## அநுரகுமார திஸாநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, பெப். 02

தனிநாடு கோரி 30 வருடங்களாக ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழர்கள், 2009ஆம் ஆண்டுடன் அந்தக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டார்கள். அவர்கள் தற்போது பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள்தான் தங்கள் உரிமைகளைக் கேட்டு ஜனநாயக வழியில் போராடி வருகின்றார்கள். அவர்களைப் புறக்கணிக்கும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசு முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் மீண்டும் அவர்களைத் தனிநாடு கோரும் நிலைக்கே தள்ளிவிடும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுதந்திர தின நிகழ்வில் இம்முறை சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்படும் என்று அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. அரசின் இந்த அறிவித்தல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழர்கள் இந்த நாட்டின் தேசிய இனம். தமிழ் மொழி தேசிய மொழி. அது அரச கரும மொழி. எனவே, சிங்களத்துடன் தமிழிலும் தேசிய கீதம் பாடுவதில் என்ன பிரச்சினை இருக்கின்றது? என்ன முரண்பாடு இருக்கின்றது? சுதந்திர தினத்தில் கட்டாயம் தமிழிலும் தேசிய கீதம் பாடப் பட்டேயாக வேண்டும்.

தமிழர்களைப் புறக்கணிக்கும் வகையிலும் தமிழ் மொழியை அவமதிக்கின்ற வகையிலும் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு கோட்டாபய அரசு உடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இல்லையேல் அது நாட்டின் நல்லிக்கணத்துக்குப் பாதகமாக அமையும். மீண்டும் ஒரு தனி நாட்டுப் போருக்கே வழிவகுக்கும்–என்றார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்று அணி என்பது சைக்கிள் காரர்களின் நிலைப்பாடு.

இப்போது புதிதாக உருவான தமிழ்த் தேசியக் கட்சியும் தனிப் பாதை அமைத்துவிட்டது. பெரும்பாலும் உதயசூரியன் சின்னத்தில் – சங்கரி ஐயாவுடன் கூட்டமைத்து – சிவாஜி, ஸ்ரீகாந்தா தரப்பு களம் இறங்கும் போலத் தெரிகின்றது.

இப்போது மூன்று வாரங்களுக்கு முன்னர் வரை ஸ்ரீகாந்தாவின் நிலை வேறாக இருந்தது.

நீதியரசர் விக்னேஸ்வரனின் தரப்புக்கு மிக உச்சபட்ச விட்டுக்கொடுப்புச் செய்து சேர்ந்து போவோம் என்று மிக உறுதியாகத் தெரிவித்தவர் அவர்.

புதிய கூட்டின் நிர்வாகக் கட்டமைப்பில் தங்களுக்குப் போதிய இடம் தராவிட்டாலும் – தேர்தல் ஆசனப் பங்கீட்டில் இடமே தராமல் போனாலும் – எமக்கு அது விடயமேயல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றாக ஒரு பலமான அணி அமைக்கவேண்டும், அதற்காக உச்சபட்ச விட்டுக்கொடுப்பை மேற்கொண்டு, ஒரு முன்மாதிரி அரசியல் கட்டமைப்பாகச் செயற்பட – செயற்பட்டுக் காட்ட – நாங்கள் தயாராக இருக்கின்றோம் – என்று என்னிடமே கூறியவர் ஸ்ரீகாந்தா.

அதற்கு இடையில் அவருக்கு என்னவாயிற்று, ஏன் இப்படிச் சீறிக்கொண்டு மாற்று அணிக்கு மாற்றுத் தேடிக் கொண்டு புறப்பட்டுவிட்டார் எனத் துருவினேன்.

இப்போதும் கூட்டின் நிர்வாகக் குழுவில் அதிக இடம் தேவை என்பதோ, தேர்தலில் கூடிய வேட்பாளர் ஒதுக்கீடு தேவை என்பதோ ஸ்ரீகந்தா – சிவாஜி தரப்பின் எதிர்பார்ப்பும் அல்ல; பிரச்சினையும் அல்ல.

சரியோ, பிழையோ இலங்கையின் மற்றத் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இல்லாத சில தனித்துவங்கள் ஸ்ரீகாந்தாவுக்கு உண்டு.

பதினான்கு, பதினைந்து வயதில் அரசியலுக்கு வந்தவர். சுமார் ஐம்பத்தியைந்து ஆண்டு கால அரசியலை நேரடியாகக் கற்றறிந்தவர். மற்றைய தமிழ் மிதவாத அரசியல் தலைவர்கள் போல ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்த போது இந்தியாவிலோ மற்றைய இடங்களிலோ சத்தம் இன்றி ஒதுங்கியிருந்த விட்டு பின்னர் வாய்ப்புக் கிடைத்த போது ஜனநாயக அரசியலுக்குத் திரும்பியவர் அல்லர் அவர். அவரது அரசியல் வாழ்க்கை சுயாட்சிக் கழகத்துடன் ஆரம்பமாகியது. எனினும் தமிழரின் விடுதலைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பிய போது, வெளியில் நின்று மற்றைய ஜனநாயகத் தலைவர்களைப்போலவேடிக்கை பார்த்தவரல்லர் அவர். துணிச்சலுடன் ஆயுதம் தாங்கிய இயக்கங்களோடு தாமும் தமது உயிரைநெருக்கடிக்குள்ஆழ்த்தி, ஒரு போராளி போல சேர்ந்து பயணித்தவர். சட்ட அறிவு, ஆங்கில புலமை, ஜனநாயக அரசியலுக்குத் தேவையான அருமையான பேச்சாற்றல், தான் எடுத்த நிலைப்பாட்டை பளிங்கு போல மற்றவர் மனதில் பதிய வைக்கும் வெளிப்பாட்டுத் திறன் என்று பல விடயங்களில் முந்தியிருப்பவர் அவர்.

மாற்று அணிக்குத் தலைமை தாங்குபவராகக் கருதப்படும் நீதியரசர் விக்னேஸ்வரன் தாங்கள் கூட்டுச் சேரப் போகும் தரப்புகள் தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிய கேள்வி – பதில்கள், பேட்டிகள் போன்றவைதான் ஸ்ரீகாந்தாவை சீற்றத்தில் ஆழ்த்தியுள்ளன என்று தெரிகிறது.

நீதியரசர் விக்னேஸ்வரன் எவ்வளவுதான் வயதில் மூத்தவரானாலும், நீதியரசராக இருந்தாலும், அறிவும் ஞானமும் விசா லமாகக் கொண்டவராயினும், நேரடி ஜனநாயகத் தேர்தல் அரசியலில் ஏழு வருடங்கள் தாம் அவர் அனுபவம். அத்தகையவர் ஐம்பத்தியைந்து வருட கால அனுபவம் கொண்ட – அரசியலில் பழமும் தின்று கொட்டையும் போட்ட – ஸ்ரீகாந்தா போன்றோரைக் கையாளும் போது, அல்லது தனது தரப்பில் கூட்டுச் சேருவோர் குறித்துப் பொத்தம் பொதுவாகக் கருத்துத் தெரிவிக்கும் போது கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எல்லோரையும் தூக்கி எறிந்து நடப்பது – அல்லது சைக்கிள்காரர்கள் போல நான் மட்டும்தான் 24 கரட் தங்கம், மற்றையவை எல்லாம் கலப்பு உலோகங்கள் என்று தூக்கி எறிந்து பேசுவது – கூட்டு அரசியலுக்குச் சரிப்பட்டுவராது.

பேச்சிலும், பேட்டிகளிலும், கருத்து வெளிப்பாட்டிலும் இத்தகைய பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டுமானால் அதற்கு சம்பந்தன் ஒரு முன்மாதிரி. தன் தரப்பில் தன்னோடு கூட்டுச் சேர்ந்தவர்கள் அல்லது பக்கத்தில் இருப்பவர்கள் விடயத்தில் குறைந்த பட்சம் பேச்சிலாவது ஒழுங் முறையை அவர் பின்பற்றுவார். ஆற்றுகின்ற காரியங்கள் எப்படியாயிலும் பேச்சில் ஓர் ஒழுங்குமுறையை – கௌரவத்தை – ஒரு தெளிவான நாகரிக நிலைப்பாட்டை – அவர் வெளிப்படுத்துவார்.

ஏன், தாம் கொண்டு வந்த விக்னேஸ்வரன் தமக்கு எதிராகத் திரும்பிய போதிலும் இன்று வரை அரசியல் நாகரிகம் குறைந்து ஒரு சொல்லாவது விக்னேஸ்வரன் குறித்துப் பேசியவர் அல்லர் சம்பந்தர். அந்த நாகரிகத்தை, எல்லாப் பேச்சுக்களிலும் – எழுதித் தயாரித்து வந்து வாசிக்கும் சபைகளிலும் தன் தரப்பு, எதிர்த்தரப்புப் பார்க்காமல் நையாண்டி பண்ணி, சீண்டி விட்டு விட்டேத்தியாக உரையாற்றும் விக்னேஸ்வரன் நிச்சயம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

கூட்டுச் சேர வரும் கட்சிகள் வேறு வழி – நாதி – இன்றித் தன்னிடம் வருகின்றன என்ற பாணியிலோ –

நாடாளுமன்றப் பதவிக் கதிரைகளை இலக்கு வைத்து மட்டுமே தன்னைச் சுற்றி அவை நிற்கின்றன என்ற நினைப்பிலோ – அல்லது மிதப்பிலோ விக்னேஸ்வரன் கருத்து வெளியிடுகின்றார் என்ற எண்ணம் ஸ்ரீகாந்தா மனதில் படிந்திருப்பதாகவே எனக்குத் தோன்றுகின்றது.

ஏற்கனவே தம்முடன் உயிரும் உணர்வுமாக பக்கத்தில் நின்ற – நெருக்கடி சமயத்தில் தமக்குத் தோள்கொடுத்த – ஐங்கரநேசனை இழந்து நிற்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

ஏன் அவரைத் தாம் இழந்தோம் என்பதற்கான காரணத்தை தாம் என்ற எண்ணத்தைத் தள்ளிவைத்துவிட்டு நீதியரசர விக்னேஸ்வரன் தேடிப்பார்பாராயின் – அந்தக் காரணங்களைப் புரிந்து கொள்ள முயற்சிப்பாராயின் – அவரைச் சூழ இருக்கும் எஞ்சிய ஸ்ரீகாந்தாக்கள், ஐங்கரநேசன்களையும் கூட அவர் இழக்கமாட்டார் என்பது என் ஆலோசனை. ஏற்பதும் ஏற்காததும் அவரைப் பொறுத்தது.

மாகாண சபை நிர்வாகம் முடியும் போது ஐங்கரநேசன் ஊழல் குற்றச்சாட்டுப் பட்டியலோடுதான் – அவப் பெயரோடுதான் – வெளியே வரும் சூழல் ஏற்பட்டது. இந்த விடயத்தில் உலகுக்கு உண்மையை அம்பலப்படுத்துவதற்குக் கிடைத்த வாய்ப்பை ஏதோ தனது நலன் கருதி முதல்வராக இருந்த விக்னேஸ்வரன் மூடி அடைத்தார் என்பதே ஒரு செய்தியாளனாக நிகழ்வுகளை அவதானித்த எனது புரிதல். அதை விரைவில் விவரமாக வாசகர்களுடன் பகிர்வேன்.

தன் வலி (துன் வலிமை), மாற்றான் வலி, தன்னுடன் சேரக் கூடிய தரப்பின் வலி உணர்ந்தால்தான் காரியமாற்றமுடியும்.

வானத்தில் மிதப்பதாக எண்ணிக்கொண்டு நிலத்தில் வீட்டைக் கட்டமுடியாது. நிலத்தில் வாழ்வதாக நினைத்தால்தான் வானத்திற்கும் ஏறமுடியும்.

மாற்று அணி முயற்சி வெற்றி பெறவேண்டுமானால் 'நான் மட்டுமே மாற்று' என்ற எண்ணத்தை முழுதாக மாற்றி 'நாங்களே ஒட்டுமொத்தமான மாற்று' என்ற எண்ணத்தை மனதில் மாட்டவேண்டும். சம்பந்தப்பட்டோர் செய்வார்களா?

– மின்னல் –

## கோட்டாபயவின் சீனப் பயணம் ரத்து!

சீனாவுக்கான பயணத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிற்போட்டுள்ளார். கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாகவே இந்த பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பயணம் இந்த மாதத்தில் திட்டமிடப்பட்டிருந்தது.

## அரசின் சகல சுதந்திர தின நிகழ்வுகளையும் தமிழ் பேசும் மக்கள் புறக்கணிக்க கோரிக்கை

தமிழில் தேசிய கீதம் பாடப்படமாட்டாது எனும் அரசாங்கத்தின் முடிவானது இலங்கையில் வாழும் தமிழை தாய்மொழியாகக் கொண்ட மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதன் வெளிப்பாடு என தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அரசின் ஏற்பாட்டில் செய்யப்படும் சகல சுதந்திர தின நிகழ்வுகளையும் தமிழ் பேசும் மக்கள் புறக்கணிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நல்லூரில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில், குறிப்பாக கொழும்பிலே நடத்தப்படவிருக்கிற கொண்டாட்டத்தில் தமிழிலே தேசிய கீதம் இசைக்கப்படாது என்கிற அறிவிப்பு அரசாங்கத்தின் சார்பிலே வெளியிடப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே, இது குறித்த தகவல் கடந்த சில வாரங்களுக்கு முன்பு வெளியானபோது தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் தரப்பிலிருந்து அதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

அப்பாடியான சந்தர்ப்பத்திலே இது தொடர்பாக எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை என்றே அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள் சிலர் பேசினார்கள். ஆனால், இப்பொழுது அரசாங்கத்தின் சார்பிலே திட்டவட்டமான அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த அறிவிப்பின் ஊடாக இலங்கையிலே தமிழை தாய் மொழியாகக் கொண்ட தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இரண்டாம் தரப் பிரஜைகள் என்கிற தோரணையிலே அரசு நடந்து கொள்கிறது என்ற தவிர்க்க முடியாத முடிவுக்கு நாம் வந்திருக்கிறோம்.

இந்த முறை இந்த அறிவிப்பு நன்கு ஆராயப்பட்ட பின்னர் தான் வெளியிடப்பட்டிருக்கிறது என்பதிலே சந்தேகம் இல்லை. இது இந்த நாட்டில் வாழ்கிற தமிழர்களையும் தமிழை தாய் மொழியாகக் கொண்டுள்ள முஸ்லிம் சகோதரர்களையும் உணர்ச்சிபூர்வமாக காயப்படுத்துகிற ஒரு நடவடிக்கை என்று நாங்கள் பகிரங்கமாக தெரிவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம்.

இந்த நிலையில், சுய மரியாதை கொண்ட தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தமட்டில் நாம் ஒரேயோரு விதத்தில் தான் எமது உணர்வுகளை வெளிப்படுத்த முடியும்.

அந்தவகையில், எதிர்வரும் 4ஆம் திகதி கொழும்பில் அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ள சுதந்திர தின நிகழ்வுகள் மட்டுமல் லாது, இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகளையும் தமிழ் பேசும் மக்கள் புறக்கணிக்க வேண்டுமென நாம் கேட்டுக்கொள்கின்றோம்–என்றார்.

## புலிகளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் கடந்த 30 வருடங்களாக ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தின் போது 600 பொலிஸாரைக் கொன்று விடுதலைப்புலிகளும் யுத்தக் குற்றம் புரிந்துள்ளனர் என விசேட அதிரடிப்படையின் முன்னாள் அதிகாரியான ஜெனட் விமல முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

இதுவரை காலமும் எந்தவொரு அரசாங்கமும் விடுதலைப்புலிகள் போர்க்குற்றம் புரிந்ததார்கள் என எந்த முறைப்பாடுக் தெரிவிக்க வில்லை. எனவேதான், இந்த முறைப்பாட்டினை தான் செய்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 600 பொலிஸார் சுட்டுக்கொன்ற இடத்தைத்தான் நேரில் சென்று பார்வையிட்டார் எனவும் ஜெனட் விமல கூறியுள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் கருணா சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தரித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்பலாகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருபவை வருமாறு:–

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த லொறியின் சாரதிக்கு தூக்கம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து சாரதி லொறியை வீதியோரமாக நிறுத்திவிட்டு ஓய்வெடுத்துள்ளார்.

இதன்போது லொறியில் ஏற்பட்ட மின்சாரக் கோளாறு காரணமாக லொறி திடீரெனத் தீப்பிடித்து எரிந்துள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருவதாக தம்பலாகாமம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவத்தில் லொறியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சாரதியான மிகிந்தபுரம் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி யோகநாதன் (வயது49) என்பவரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## யாழ்.ஆயருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனுக்கும் இடையே சந்திப்பு நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்திலுள்ள ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகப் பேசப்பட்டதாகவும், இது அரசியல் தொடர்பான சந்திப்பு இல்லை என்றும் அங்கஜன் தெரிவித்தார்.

முக்கியமாக மக்களுக்கு தேவையான கல்வி, மீன்பிடி மற்றும் விவசாயம் உள்ளிட்டவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் தாங்கள் கலந்துரையாடினர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பல்துறை சார்ந்த நிபுணர்களைக் கொண்ட அபிவிருத்தி குழு ஒன்று ஆயர் இல்லத்தினால் உருவாக்கப்பட்டிருப்பதற்கு நான் பாராட்டுக்களைத் தெரிவித்தேன். அந்தக் குழுவுக்கு எனது முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன் என ஆயரிடம் உறுதியளித்தேன்.

கல்வி, விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய துறைகளை மேம்படுத்துவது தமிழ் மக்களுக்கு முக்கியமானது. பொருளாதார அபிவிருத்தியின் ஊடாகத் தமிழ் மக்களுடைய அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரான ஆயருக்கும் அவருடைய குழுவுக்கும் என்னுடைய ஆதரவை முழுமையாக வழங்குவேன் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் மேலும் தெரிவித்தார்.

## கிராமத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குருநாகல் கிரிபாவ வராகமவில் இது இடம்பெற்றது. இந்தத் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் 14 ஆயிரத்து 22 குடும்பங்களுக்காக வீடுகளை களை நிர்மாணிக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

60 நாள்களில் கட்டி முடிக்கப்படும் இந்த வீட்டுத் திட்டத்துக்காக 8 ஆயிரத்து 413 மில்லியன் ரூபா புதிய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் கிராம அலுவலகர் பிரிவில் ஒரு பயனாளி என்ற விகிதம் தெரிவு செய்யப்பட்டு வீட்டுத் திட்டம் வழங்கப்படுகிறது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இந்த வீட்டுத் திட்டத்தை வழங்குகின்றது. அரச அதிகாரிகள் தலைமையினால் சிறப்புக் குழு ஒன்றின் மூலம் வீட்டுப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் 10 தேர்தல் தொகுதியிலும் தலா ஒரு பயனாளி என்ற வீதம் 10 பயனாளிகளுக்கு நேற்று வீட்டுத் திட்டம் வழங்கிவைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் இந்த ஆரம்ப நிகழ்வில் பங்கேற்று வீடுகளுக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார்.

அத்துடன், ஒவ்வொரு பயனாளியின் வளவிலும் தலா இரண்டு பயன்தரு மரங்களும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் நாட்டப்பட்டன. (ஐ)

## தேசிய கீதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழர்களை உசுப்பேற்றுகின்ற வகையில் கருத்துக்களை வெளியிடுவதை ஜே.வி.பியினர் உடன் நிறுத்த வேண்டும். சிங்கள - பௌத்த நாடான இலங்கையில் சிங்களவர்களுக்கும், சிங்கள மொழிக்கும்தான் முதலிடம். இந்த வரையறைக்குள் இந்த நாட்டில் வாழும் சகல இனத்தவர்களும் கட்டுப்பட்டே ஆக வேண்டும்.

ஒரு நாட்டுக்குள் ஒரு தேசியக் கொடியும் ஒரு தேசிய கீதமும்தான் இருக்கின்றன. அப்படி இருக்கின்றபோது தேசிய கீதம் மட்டும் ஏன் இரண்டு மொழிகளில் பாடப்பட வேண்டும்?

தேசிய கீதத்தை இரண்டு மொழிகளில் பாடினால் தேசியக் கொடியையும் இரண்டு வகைகளில் தமிழர்கள் கேட்பார்கள். அத்துடன், தமக்கென ஒரு நாடு வேண்டும் எனவும் கேட்பார்கள்.

அந்த நிலைமையை நாம் ஏற்படுத்த விரும்பவில்லை. அதனால்தான் தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டும் பாடப்பட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்துள்ளோம்-என்றார். (ஐ)

## டக்ளஸும்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விஜயத்தில் கடற்றொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தாவும் இடம்பெறுகின்றார்.

இந்தியப் பிரதமருடன் நடைபெறும் பேச்சில் இந்திய- இலங்கை மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடல் எல்லை மீறுதல் காரணமாக இந்திய மீனவர்கள் மட்டுமல்லாது இலங்கை மீனவர்களும் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்படுகின்றனர். இது இரண்டு நாடுகளுக்கும் இடையில் பிரச்சினையாக மாறியுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரும் இந்தியாவுக்கு விஜயம் செய்ய உள்ளனர். (ஐ)

## விக்கி கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றீடாக புதிய மாற்றுத் தலைமையை உருவாக்க முயற்சிகள் பல முனைகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனினும் அந்த முயற்சியானது கொள்கை அடிப்படையில் இருக்கவேண்டுமே தவிர வெறுமனே பதவி ஆசைக்காகவும் நாற்காலிகளுக்காகவும் உருவாக்கப்படுவதாக இருக்கக்கூடாது.

மேலும் உருவாக்கப்படும் கூட்டணியானது மக்களுக்குச் சேவையாற்ற கூடிய பலமான ஒரு கூட்டணியாக இருக்க வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

எனவே நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாம் தனித்துப் போட்டியிடுவது என்று தீர்மானித்துள்ளோம். அவ்வாறு தனித்துப் போட்டியிடும்போது கொள்கை அளவில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து பயணிப்பதற்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம். மேலும் தனித்துப் போட்டியிடுவதாக இருந்தால் அதற்கும் தயாராக இருக்கின்றோம். மக்கள் எம்மைத் தோற்கடித்தாலும் பரவாயில்லை. நாம் கொள்கையில் உறுதியாக இருப்போம்.- என்றார்.

(விவரமான செய்தி 9 ஆம் பக்கத்தில்)

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசு முன்வைத்துள்ளது. அவை வருமாறு:-

1.இலங்கை அரசு கொல்லப்பட்டவர்களின் மிச்சங்களை நல்லடக்கம் செய்வதற்காக அவர்தம் குடும்பத்தினரிடம் உடனடியாக மீட்டளிக்க வேண்டும் அல்லது சிறிலங்கா இராணுவம் அவர்களின் உடலங்களைப் புதைத்த இடத்தை வெளிப்படுத்த வேண்டும்.

2.இறந்து விட்டார்களென கோட்டாபய அறிவித்துள்ள ஆயிரக்கணக்கான தமிழர்கள் இறந்து போன சூழல்கள் பற்றிய விவரங்களைத் தரும் படி மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையர் மிச்சேல் பச்சலெட் இலங்கையைக் கோர வேண்டும். தெரிந்து கொள்ளும் உரிமையின் படியும், உண்மையறியும் உரிமையின் படியும் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளும் உரிமை குடும்பத்தினருக்குண்டு. தெரியாமலிருக்கும் தொடர் வேதனையை இவ்விதம் தணித்துக்கொள்ள இயலும்.

3.காணாமற்போனவர்கள் உயிருடனில்லை என்ற கோட்டாபயவின் அறிவிப்புக்கு ஐ.நா உயர் ஆணையாளர் பச்சலெட் 2020- பெப்ரவரி-மார்ச்சில் நடைபெறும் 43ஆம் அமர்வுக்கான தம் வாய்மொழி அறிக்கையில் மறுவினையாற்ற வேண்டும்.

4. கட்டாயக் காணாமற்போதல்கள் பற்றிய ஐ.நா. செயற்குழு (WGEID) இன்னமும் தன்முன்னிருக்கும் காணாமற்போன தமிழர்களின் ஆயிரக்கணக்கான வழக்குகளுக்கு முன்னுரிமை தர வேண்டும்.

5.கட்டாயக் காணாமற்போதல்கள் பற்றிய ஐ.நா. செயற்குழு (WGEID) பரிந்துரைத்தபடி 'போர்க்குற்றங்களையும் மானிடத்துக்கு எதிரான குற்றங்களையும் விசாரிப்பதற்குரிய கட்டளையோடு பன்னாட்டு நீதிபதிகளையும் வழக்குத் தொடுநர்களையும், சட்டத்தரணிகளையும், புலனாய்வாளர்களையும் ஒருங்கிணைத்து தனிநோக்குக் கலப்புச் சிறப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென உயர் ஆணையர் அலுவலகப் புலனாய்வு (OI SL) தந்த அழைப்பைப் புதுப்பிக்க வேண்டும்.

6.கட்டாயக் காணாமற்போதல்கள் பற்றிய ஐ.நா.செயற்குழு (WGEID) பரிந்துரைத்தபடி, ஆகக் கடைசியில் இப்போதாவது முந்தைய ஐ.நா. மனிதவுரிமை உயர் ஆணையர் செய்து அல் உசைன் மனிதவுரிமைகளை வலுவாக்கவும் குற்றங்கள் தண்டிக்கப்படா நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், போர்க்குற்றங்களும் மானிடத்துக்கு எதிரான குற்றங்களும் புரிந்தவர்களைப் பொறுப்புக்கூறச் செய்யவும் அளித்த பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளும்படி ஐ.நா. மனிதவுரிமைப் பேரவைக்கு அழைப்பு விடுக்க வேண்டும்.

7.ஐ.நா பாதுகாப்புப் பேரவை சென்ற ஆண்டு நிறைவேற்றிய ஒரு தீர்மானம் ஆயுத மோதலின் சூழலில் கட்டாயக் காணாமற்போதலை ஒரு போர்க்குற்றமாக வரையறுத்ததைக் கருத்தில் கொண்டு, குற்றங்கள் தண்டிக்கப்படா நிலை தொடர்வது பன்னாட்டு அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைகிறது என்ற அடிப்படையில் ஐ.நா. பாதுகாப்புப் பேரவை ஐ.நா. சாசனத்தின் அத்தியாயம் 7 தரும் அதிகாரத்தைப் பயன்படுத்தி சிறிலங்கா நிலைமையைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பிவைக்க வேண்டும். ஆகிய கோரிக்கைகளை ஐ.நாவை நோக்கி முன்வைத்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், ஏழு கோரிக்கைகளையும் ஏற்றுத் தொடர் நடவடிக்கை எடுப்பதன் மூலம் பன்னாட்டுலக நீதி செத்து விடவில்லை என்ற திட்டவட்டமான அவசரச் செய்தியை பன்னாட்டுலகச் சமுதாயத்தால் விடுக்க முடியும் எனத் தெரிவித்துள்ளது.

ஆயிரக்கணக்காகக் காணாமற்போன தமிழர்கள் உயிருடனில்லை என்று கோட்டாபய அறிவித்திருக்கின்றமை தானும் சிறிலங்கா அரசும் பன்னாட்டுச் சட்டத்தை மோசமாக மீறியுள்ளோம் என்ற குற்ற ஒப்புதலுக்குச் சற்றும் குறைந்ததன்று. என்ன செய்தாலும் சிறிலங்கப் படைகளால் கொல்லப்பட்ட பல்லாயிரம் தமிழர்களையும் உயிர்மீட்க முடியாது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினநாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காணாமற்போனோர் தொடர்பில் திறமான அலுவலகம் அமைப்பதாகத் தரப்பட்ட உறுதிமொழி பன்னாட்டுலகச் சமுதாயத்தை ஏமாற்றும் நோக்கமுடைய நாடகமே தவிர வேறன்று என்பது கோட்டாபயவின் ஒப்புதலிலிருந்து தெளிவாகிறது என்றும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சிறந்ததொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்துகொள்ள வேண்டும்

என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம். அலிசப்ரி தெரிவித்தார்.

'புதிய அரசின் வகிபாகமும், பல் இன மக்கள் வாழும் இலங்கையில் முஸ்லிம்களின் எதிர்காலமும்' எனும் தொனிப்பொருளில் கல்முனை முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் முன்றலில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். முன்னாள் கல்முனை மாநகரசபை உறுப்பினர் வெஸ்டர் ஏ.எம். றியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கென தீவிரவாத இயக்கம் எதுவும் இருக்கவில்லை. முஸ்லிம்கள் தீவிரவாத கொள்கைகளை எப்போதுமே ஆதரித்தவர்களுமில்லை. ஆனால் ஒருவர் செய்த செயலினால் சகல முஸ்லிம்களுக்கும் தலைகுனிவான நிகழ்வாக அந்தச் சம்பவம் அமைந்தது. அந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட அப்பாவிகளை சட்டத்தரணியாக இருந்த நாங்கள் ஒரு குழுவாக இணைந்து போராடி விடுதலை செய்துள்ளோம். எமது நாடு முன்னேற வேண்டுமாயின் பாதுகாப்பு அவசியம். மக்கள் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழ பாதுகாப்பு அவசியம். அந்தப் பாதுகாப்பை உறுதி செய்யக் கூடியவர் எமது ஜனாதிபதி என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. நாங்கள் அரசியல் செய் வது எங்கள் பொக்கற்றுக்களை நிரப்புவதற்காக அல்ல. இலங்கையில் உள்ள அனைத்து இன மக்கள் ஒற்றுமையாக வாழ வழி வகுப்பது எமது நோக்கமாகும் அன்று மலேசியாவை மகாதிர் முகம்மது, சிங்கப்பூரை லீகுவான் யூ, தென்னாபிரிக்காவை ஜெனரல் பார்க் போன்ற தலைவர்கள் எவ்வாறு சிறந்த முறையில் கட்டியெழுப்பினார்களோ அதேபோன்ற தலைவர்தான் கோட்டாபய ராஜபக்ஷ என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக நாம் ஜாதி பேதங்களை மறந்து நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் .

இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் சகல சந்தர்ப்பத்திலும் தாய்நாட்டின் நலன் கருதியே செயற்பட்டு வந்துள்ளனர். அதேபோன்று சகல இன மக்களுடனும் ஐக்கியத்துடன் வாழும் சூழலைச் சீர்குலைக்கச் சில தீய சக்திகள் முயற்சித்து வருகின்றன. இதனை ஒருபோதும் நாங்கள் அனுமதிக்க முடியாது. இந்த நாட்டில் வாழும் சகல இனங்களுடனும் ஒற்றுமையாகவும், சகவாழ்வுடனுமே வாழ முஸ்லிம்கள் விரும்புகின்றனர்.

நீண்ட நாட்களுக்கு பின்னர் சிறந்த ஒரு ஜனாதிபதியை பெற்றிருக்கிறோம். இந்த ஜனாதிபதி சொல்வதை செய்யக் கூடிய தைரியமான ஆளுமை மிக்கவர். இந்த நாட்டை தலைசிறந்த நாடாக மாற்றும் திறமை கொண்டவர். தேர்தல் காலங்களில் மக்களிடம் பொய்யான பிரச்சாரங்களை செய்தவர்கள் கண்ணாடி முன்னர் நின்று சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும். முஸ்லீம் மக்களின் தலைவர்களாக உள்ள இவர்கள் தற்போது டீலர்களாகவே அண்மைக்காலங்களாக வலம் வருவது வேதனையாக உள்ளது. முஸ்லிம்களாகிய நாங்கள் என்றும் தாய்நாட்டை ஆதரிப்பவர்கள், பிரிவினைவாதத்தை ஆதரிப்பவர்கள் அல்ல என்றாலும் சிலர் எம்மை இனவாதிகளாகவும் அடிப்படைவாதிகளாகவும் காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

கிழக்கில் முஸ்லிம்கள் 40 வீதம் மட்டுமே வாழ்கிறார்கள். ஆனால் கிழக்கிற்கு வெளியே 60வீதம் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த நாட்டில் வாழும் நாங்கள் பெரும்பான்மைச் சமூகத்துடன் சேர்ந்து இணைந்தே வாழ வேண்டும். சிங்கள மக்களின் நகரம் கண்டி என்பது போன்று தமிழர்களின் நகரம் யாழ் போல, கிறிஸ்தவர்களின் நகரம் நீர்கொழும்பு என்பது போல, முஸ்லிம்களின் நகரம் கல்முனைதான். மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாபெரும் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களுக்கும் எனக்கும் இடையிலான உறவு 1994 இருந்து ஆரம்பமானதாகும். நானும் அவரும் சவூதியில் வைத்து இந்த நாட்டின் முஸ்லிம்களின் இருப்புப் பற்றி தீவிரமாக ஆராய்ந்துள்ளோம். அவரும் நானும் சட்டக்கல்லூரியில் மாணவ தலைவர்களாக இருந்த வரலாற்றை நினைவு கூருகிறேன். எனவே நாங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் பிரிவினைவாதத்தை ஆதரிப்பவர்கள் அல்லர் என்றாலும், பேரம் பேசி சமூகத்தின் நலன்களை பெற்றுக் கொள்வதில் பின்னிற்கப் போதில்லை-என்றார்.

இந்நிகழ்வில் இலங்கை லொத் தர் சபையின் தலைவர் சட்டத்தரணி லலித் பியும் பெரேரா, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் உவைஸ் முஹம்மட் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## அவலை நினைத்து உரலை இடித்தல்

அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது என் பார்கள். அது போலத்தான் இருக்கின்றது அனந்தி சசிதரன் கூறிய கருத்துக்கு கருணா அம்மான் (விநாயக மூர்த்தி முரளிதரன்) கூறிய எதிர்வினை.

"விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தபோது போரா ளிகளை வழிநடத்திய தளபதியாக இருந்தவர் கருணா அம்மான். அவர் இப்போது வெளியில் உல்லாசமாக இருக் கின்றார். போராடிய போராளிகள் உள்ளே (சிறைக்குள்ளே) வாடுகின்றனர்." – என்று யாழ்ப்பாணத்தில் ஒரு செய்தி யாளர் மாநாட்டில் அனந்தி சசிதரன் கூறியிருந்தார்.

அதற்குள் பதில் கருத்துத் தெரிவிக்கின்றார் என்று எண்ணிக் கொண்டு, அவலை நினைத்தபடி உரலை இடித்த கதையாக விளக்கமளிக்க முற்பட்டிருக்கின்றார் கருணா.

அனந்தி சசிதரன் சொல்ல வந்த விடயம் தெளிவானது. அது பூடகமாக – உட்கிடையாக – அவரது வாசகங்களுக்கு இடையில் பொதிந்து – புதைந்து – கிடந்தாலும் அதுதான் உண்மை.

தலைவர் பிரபாகரனின் தலைமையிலான தமிழர்க ளின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தமையால் கருணா இன்று வெளியில் 'ஜாலி'யாக (உல்லாசமாக) இருக்கின்றார். கடைசி வரை பிரபாகரனின் வழியில் நின்றவர்களில் ஒரு பகுதியினர்தான் இன்னமும் சிறையில் வாடுகின்றனர் என்பதைத்தான் அனந்தி சசிதரன் சொல்லாமல் சொல்ல வந்தார்.

அதை மறுத்துரைப்பதாக நினைத்துக் கொண்டு, இப் போது சிறையில் இருக்கும் அரசியல் கைதிகள் எவரும் புலிகளின் போராளிகள் அல்லர், புலிகளின் ஆதரவாளர் கள், உதவியாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மட்டுமே என்று கூற முற்பட்டிருக்கின்றார் கருணா.

அவரின் இந்தக் கூற்றுத் தொடர்பில் ஆதாரங்களோடு சில விடயங்களைப் பதிலடியாக நாம் முன்வைக்க முடியும். ஆனால் நாம் அதை முன்வைத்து விமர்சிக்கப் போவ தில்லை. அதனால் தமிழினத்துக்குப் பயன் ஏதும் கிட்டப் போவதில்லை.

சரி. ஒரு பேச்சுக்கு அவர் சொன்னவைதான் உண்மை என்று வைத்துக் கொள்வோம். அப்படியாயின் அது இன்ன மும் மோசமான நிலைமை அல்லவா?

ஆயுதம் ஏந்திப் போராடிய போராளிகள் எல்லோரும் வெளியில். அவர்களுக்கு ஒத்தாசை புரிந்து, உதவிய ளித்து, செயற்பாட்டாளர்களாகப் பணியாற்றிய ஆதரவா ளர்கள்தான் உள்ளே அரசியல் கைதிகளாக வாடுகின்றார் கள் என்றால் – அதுவும் யுத்தம் முடிந்து பத்து ஆண்டுகள் கடந்த பின்னரும் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் அவல வாழ்வு வாழ்கின்றார்கள் என்றால் – அதைப் போல மிகப் பெரிய கேவலம் யாதாக இருக்க முடியும்?

புலிகளுக்கு இத்தகைய நெருக்கடி கால உதவிகளை வழங்கிய பலரும் விரும்பி அவற்றைச் செய்தவர்களும் அல்லர். சூழ்நிலைக் கட்டாயம் பலரை இப்படிச் செயற்பட வைத்திருக்கலாம்.

2009 இல் யுத்தம் முடிந்த பின்னர், 2015 ஜனவரி வரை சுமார் ஐந்தரை ஆண்டுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் ஆட்சிதான் நீடித்தது. அந்த ஆட்சியில் இதே கருணா அம்மான் நியமன எம்.பியாகவும் பிரதி அமைச்சராகவும் பதவி வகித்தவர்.

அப்போது இந்த விடயம் தொடர்பில் கருணா அம்மான் என்ன செய்து கிழித்தார் என்று கேட்க விரும்புகின்றோம்.

பன்னீராயிரம் போராளிகளுக்குப் புனர்வாழ்வளித்து விடுவிக்கும் பணி அப்போது நடந்தது என்று கருணா அம் மான் கூறக் கூடும். அது அவர் இடம்பெற்ற அரசினால் மேற் கொள்ளப்பட்டது என்பதால் அப்படி அவர் உரிமை கோருவதை நாம் மறுத்துரைக்க முடியாது என நினைக்கிறோம்.

அவ்வாறு போராளிகளைப் பல்லாயிரக் கணக்கில் விடுவித்த கருணாவையும் உள்ளடக்கிய அந்த அரசும் போராளிகளை வெளியே விட்டுவிட்டு உதவி செய்த – ஒத் தாசை புரிந்த – செயற்பாட்டாளர்களைப் பத்தாண்டுகள் கழிந்தும் இப்படி தடுத்து வைத்திருப்பது பெரும் அடாத்து அல்லவா? அநீதி அல்லவா?

"இப்போது உள்ளே இருப்பவர்கள் எவரும் போராளிகள் அல்லர். புலிகளுக்கு உதவி, ஒத்தாசை புரிந்த செயற் பாட்டாளர்கள் மட்டுமே" என்ற கருணாவின் கருத்து நிலைப்பாடு – கருத்து வெளிப்பாடு – வேறு உள்நோக்கம் கொண்டதாகவும் இருக்கலாம்.

அப்படிக் கூறுவதன் மூலம், 'ஆகவே அவர்களை இப் படித் தடுத்து வைத்திருப்பது பெரும் அநீதி, பித்தலாட்டம், எனவே விரைந்து அவர்களை விடுவியுங்கள் என்று ராஜபக்ஷ அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் – 'ஸேம் சைட்' கோல் அடிக்கும் – எத்தனமாகக் கூட அது இருக்கலாம்.

அதுதான் அவரின் நோக்கம் என்றால், இந்தக் கூற் றுக்காக அவரைக் கண்டிக்கப் போய் நாம் தான் அவலை நினைத்து உரலை இடித்த கதையாக நடந்து கொண்டோம் என்றாகி விடும்.

## முகநூலுக்குக் கட்டுப்பாடு!

# ஐ.நாவிடம் தொழில்நுட்ப உதவி கோருகிறது இலங்கை



கொழும்பு, பெப். 02

இனம், மதங்களுக்கிடையில் குரோதத்தை விதைக்கும் வகையில் முகநூல் உட்பட சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கப்படும் பரப்பு ரைகளைக் கட்டுப்படுத்துவதற்குப் புதிய சட்ட திட் டங்கள் வேண்டும். இவற்றை இயற்றுவதற்கு ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் ஒத்து ழைப்பும் அவசியமாகும்.

– இவ்வாறு நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமல்சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 43 ஆவது கூட்டத்தொடர் சுவிஸ் தலைநகரான ஜெனிவாவில் பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ளது.

இந்நிலையில் இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளரின் அலுவலக அதிகாரிகளான மோனா ரிஷ்மவி , ரொறி முன்கோவன் , பிரான்ஸிஸ்கா மொரோட்டா ஆகியோர் நீதி அமைச்சரை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இலங்கையின் நீதித்துறை கட்டமைப்பில்சட் டத்தின் ஆட்சி எவ்வாறு நடைபெறுகின்றது என்பது தொடர்பில் இதன்போது விரிவாக கலந்து ரையாடப்பட்டதுடன்,இதற்கு தேவையான சட்ட மறுசீரமைப்பு பணிகளுக்கு தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குவதற்குஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தயா ராகவே இருப்பதாக அதிகாரிகள்எடுத்துரைத்தனர்.

முகநூல் மற்றும் சமூகவலைத்தளங்கள் ஊடாக இனம், மதங்களுக்கிடையில் குரோதத்தை விதைக்கும் வகையிலானசெயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டம் இயற்றப்பட வேண்டியதன் அவசியத்தை இச்சந்திப்பில் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக சமூகவலைத்தளங்களில் பொறுப் பற்ற விதத்தில் பதிவுகள் இடம்பெறுகின்றமை யால் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன.

எனவே, இலங்கையில்முகநூல் மற்றும் சமூக வலைப்பின்னல்களைப் பயன்படுத்துவதில் இது போன்ற முறைகேடுகளைத் தடுக்கக் கடுமை யான சட்ட அமைப்பு தேவை என்றும் –

இதற்கான பொறிமுறையை உருவாக்கு வதற்குச் சர்வதேசத்தில் பின்பற்றப்படும் நடை முறைகள், அனுபவம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள்ஆணையாளர் அலுவலகத்தினால்வழங் கப்படும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மிக முக்கிய மாகும்எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் நேற்று திடீரென முளைத்தது சோதனைச் சாவடி!






வவுனியா குருமன்காடுச் சந்தியில் நேற்றுக் காலை 7.00 மணிமுதல் இராணுவத்தினர் சோதனைச்சாவடி அமைத்து சோதனை நடவடிக் கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வவுனியா – மன்னார் பிரதான வீதியூடாகப் பயணிக்கும் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனைக்கு உட் படுத்தப்பட்டுள்ளமையுடன் பதிவு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படு கின்றது.

திடீரென அமைக்கப்பட்ட இந்தச் சோதனை சாவடி காரணமாக குரு மன்காட்டுச் சந்தியில் சற்று பதற்ற மான நிலை காணப்படுவதுடன் மக் கள் அச்சத்துடன் பயணத்தை மேற் கொண்டு வருகின்றனர்.

ஊடகவியலாளர்கள் சோதனை நடவடிக்கையினை புகைப்படம் , காணொலி எடுப்பதற்கு இராணுவத்தி னர்தடைவிதித்தமையுடன் எடுக்கப்பட்ட காணொளி களை அழிக்குமாறும் உத்தரவு பிறப்பித்தி ருந்தனர். எனினும் தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி புகைப்படம், காணொலிகள் மீளப் பெறப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாளை 03.02.2020 – திங்கட்கிழமை

நட்சத்திரம்: கார்த்திகை மரண மு.இ. 10.11 வரை இராகுகாலம் : 08.05 – 09.35
திதி : நவமி மாலை 06.20 வரை சுப நேரம் : 12.35 – 02.05

# சர்வமும் சஜித் மயம்!

## ‘மெகா’ கூட்டணி விரைவில்!

கொழும்பு, பெப். 02

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் அமையவுள்ள பரந்தப்பட்ட அரசியல் கூட்டணியில் இணைவதற்கு ரணில் தரப்பும் சம்மதம் தெரிவித்துள்ளதால் கூட்டணியின் புதிய வேலைத்திட்டம் அடுத்த வாரமளவில் மக்கள் மயப்படுத்தப்படும் – என்று ஐக்கிய தேசியக்கட்சியின் சஜித் ஆதரவு உறுப்பினரான நளின் பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு கூடுவதற்கு முதல்நாள் ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாஸவும் நேரில் சந்தித்து – செயற்குழுவில் ஆராயப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர்.

எனினும், மறுநாள் காலை செயற்குழுவிலிருந்து சரத்பொன்சேகா, இம்தியாஸ், ரோஸி சேனாநாயக்க, அஜித் பி. பெரேரா



ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர் என அறியக் கிடைத்தது.

இதற்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் நாம் செயற்குழு கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

எனினும், மலிக் சமரவிக்கிரம, மங்கள சமரவீர ஆகியோரை எமது பிரதிநிதிகளாக அனுப்பிவைத்தோம்.

சஜித் பிரேமதாஸ தலைமையில் அமையவுள்ள பரந்தப்பட்ட அரசியல் கூட்டணியுடன் இணைந்து செயற்படுவதற்கு ரணில் தரப்பு இணக்கம் வெளியிட்டது.

அத்துடன், வேட்புமனு குழுவின் தலைமைப்பதவி, சஜித்தின் பரிந்துரையின் பிரகாரம் கூட்டணியின் பொதுச்செயலாளர் பதவிக்கு உறுப்பினர் தேர்வு என எமது முக்கிய கோரிக்கைகள் ஏற்கப்பட்டன.

சஜித் பிரேமதாஸவுக்கு இவ்வாறு சுயாதீனமாக செயற்படுவதற்கு, துணிகரமாக முடிவெடுப்பதற்குரிய நிலை உருவாக வேண்டும் என்பதே எமது இலக்காக இருந்தது. அந்த இலக்கு தற்போது நிறைவேறியுள்ளது.

எனவே, அனைத்து தரப்புகளையும் இணைந்துக்கொண்டு பரந்தப்பட்ட கூட்டணி அமைக்கப்படும். அதன் வேலைத்திட்டம் அடுத்தவாரம் மக்கள் மயப்படுத்தப்படும்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தற்போதைய யாப்பின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்க தாமாக விரும்பி பதவியை இராஜினாமா செய்தால் மட்டுமே புதியவரை தலைவர் பதவிக்கு நியமிக்கலாம்.

அதனை செய்வதற்கு அவர் தயாரில்லை. அத்துடன், கட்சி யாப்புடன் எம்மால் மோத முடியாது.

எனவேதேன் சஜித் தலைமையில் கூட்டணி அமைக்கும் முயற்சியில் இறங்கினோம். அது தற்போது வெற்றிபெற்றுள்ளதால் பொதுத்தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வோம் – என்றார். (ஐ)

## வெளிநாடுகளிலிருந்து இலங்கை வருவோருக்கு சிறப்புப் படிவங்கள்

கொழும்பு, பெப். 02

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகள் அனைவருக்கும் நேற்று முன் தினம் முதல் விசேட படிவம் வழங்கப்பட்டு வருவதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவியுள்ளதைத் தொடர்ந்து உலக சுகாதார நிறுவனம் அவசரநிலையை அறிவித்துள்ளமை காரணமாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒரு சில தகவல்களைப் பெறும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை இந்தப் படிவம், சீனாவிலிருந்து வருவோருக்கு மாத்திரம் வழங்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் முதல் வெளிநாட்டிலிருந்து வரும் அனைத்துப் பயணிகளுக்கும் அதனை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் அனில் ஜயசிங்க தெரிவித்தார். (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.30

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

கலைவாணி சந்தி, கலைவாணி வீதி, கருவப்புலம் வீதி ஆகிய இடங்களிலும் –

**வவுனியாப்பிரதேசத்தில் -**

புதுக்குளம், கோவில்குளம் கிராமம், தந்திரிமலை, சின்னசிப்பிக்குளம்ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## யாழிலிருந்து கஞ்சா கடத்திய பொலிஸ்காரர் மாட்டினார்!

வவுனியா, பெப். 01

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் காரினுள் கேரளக் கஞ்சாவினை வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை நேற்றுமுன் தினம் இரவு 10.00 மணியளவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழிலிருந்து தென்பகுதி நோக்கி காரினுள் கேரளக் கஞ்சா கடத்தப்படுவதாக கனகராயன்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின்



அடிப்படையில் கனகராயன்குளம் பொலிஸார் வீதியில் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது யாழ்ப்பாணத்திலிருந்து பொலனறுவை நோக்கிப்பயணித்துக் கொண்டிருந்த காரை மறித்து பொலிஸார் சோதனைக்குட்படுத்திய சமயத்தில் காரினுள் 8 கிலோ 60 கிராம் கேரளக் கஞ்சாவினை வைத்திருந்த குற்றச்சாட்டில் காரின் சாரதியைப் பொலிஸார் கைது செய்தமையுடன் கேரளக் கஞ்சாவினையும் காரையும் பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட காரின் சாரதி அம்பாந்தோட்டை பகுதியைச் சேர்ந்த 31வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஆவார். மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற் கொண்டு வருவதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## 191 கிலோகிராம் கஞ்சாவுடன் சிக்கிய 20 வயது இளைஞன்!

கொழும்பு, பெப். 02

கடற்படையினரும் சுங்க பிரிவினரும் இணைந்து நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் மாதகல்துறைப் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீடொன்றில் பதுக்கி வைத்திருந்த 191 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவே சிக்கியுள்ளது.

20 வயதான ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் அவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ். சுங்கப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஓகஸ்ட்டுக்கு முன்னர் தேர்தல்கள் இல்லை?

கொழும்பு, பெப். 02

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரையில், எந்தவொரு தேர்தலையும் நடத்துவதில்லை என்ற தீர்மானத்துக்கு, தற்போதைய அரசு வந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுனர் பஸில் ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

அரசு என்ற ரீதியில், பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் உள்வீட்டுப் பிரச்சினைகள் பல உள்ளமையால், அவற்றுக்குத் தீர்வு கண்ட பின்னரே, தேர்தலை நோக்கி நகர்வது சாத்தியமானதென்றும், ரணிலிடம் பஸில் தெரிவித்திருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

மேலும் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு, இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் வரையில் கால அவகாசம் இருப்பதால், அதுவரையில் நாடாளுமன்றத்தைக் கலைத்து அவசரப்பட்டு தேர்தலை நோக்கி நகராமலிருப்பதற்கே அரசு ஆலோசித்து வருவதாகவும், அறிய முடிந்தது.(ஐ)



# வைரஸ் பரவிய சீனாவின் வுகானில் இருந்து 324 இந்தியர்கள் டெல்லி வந்து சேர்ந்தனர்

## 14 நாள்கள் இராணுவக் கண்கணிப்பில் வைத்திருக்க முடிவு

கொரனோ வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 258 ஆக அதிகரித்துள்ள நிலையில், சீனாவின் வுகான் நகரில் இருந்து 324 இந்தியர்கள் டெல்லிக்கு புறப்பட்டனர்.

சீனாவின் வுகான் நகரில் கல்வி மற்றும் வேலை நிமித்தமாக சுமார் 600 இந்தியர்கள் உள்ளனர். கொரோனா வைரஸ்



பாதிப்பு அதிகரித்ததும் இவர்கள் தங்களது விடுதிகள் மற்றும் வீடுகளில் முடங்கும் நிலை ஏற்பட்டது.

தங்களை மீட்க வேண்டும் என மாணவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, சீன அதிகாரிகளுடன் வெளியுறவுத் துறை அதிகாரிகள் பேச்சு நடத்தினர். சீன அரசு அனுமதியளித்ததை தொடர்ந்து ஏர் இந்தியாவின் சிறப்பு போயிங் விமானம் ஒன்று வுகான் நகருக்கு சென்றது. டெல்லி லோகியா மருத்துவமனையை சேர்ந்த 5 மருத்துவ நிபுணர்களுடன் சென்ற இந்த விமானம் 324 இந்தியர்களுடன் டெல்லிக்கு புறப்பட்டது



முதலில் அங்கு இருந்து 330 இந்தியர்களை விமானத்தில் ஏற்றிவர திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அதில் 6 பேருக்கு காய்ச்சல் இருந்தது, வுகான் விமான நிலைய சோதனையில் கண்டறியப்பட்டதை அடுத்து, அவர்களை விமானத்தில் செல்ல சீன அதிகாரிகள்



அனுமதிக்கவில்லை. இதையடுத்து, 3 சிறார்கள், 211 மாணவ – மாணவிகள் உள்பட, 324 இந்தியர்களை ஏற்றிக் கொண்டு ஏர்இந்தியா சிறப்பு விமானம், நேற்று காலை 7.30 மணியளவில் டெல்லியில் தரையிறங்கியது. 324 பேரும் விமான நிலையத்தில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பின்னர் அவர்கள் அனைவரும் பஸ்கள் மூலம் டெல்லியில் உள்ள, இந்தோ – திபெத்திய எல்லை காவல்படை முகாமுக்கும், ஹரியானாவில் மனேசரில் உள்ளிராணுவ முகாமுக்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு உள்ள இராணுவத் தற்காலிக கண்காணிப்பு மையத்தில் இந்தியர்களைத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விமான நிலையத்தில் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகளை அடுத்து பல்வேறு மருத்துவ சோதனைகளுக்கு அவர்கள் உட்படுத்தப்படுவார்கள். அவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவர். அவர்கள் அனைவரும் கையுறை, உடலை மறைக்கும் உறை ஆகியவை அணிந்து மிகவும் பாதுகாப்புடன் வைக்கப்படுவார்கள்.

வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டால் அவர்கள் உடனடியாக இராணுவ மருத்துவமனையின் தனிமைப்படுத்தப்பட்ட வார்டுக்குள் சிகிச்சைக்காக சேர்க்கப்படுவார்கள். பாதிப்பு இல்லை என உறுதிசெய்யப்பட்டவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

# இரசாயன ஆலையில் பயங்கரத் தீ விபத்து!

## தெலுங்கானா வாரங்கலில் சம்பவம்



தெலுங்கானா மாநிலம் வாரங்கல் அருகே உள்ள குவிலாசபுர் கிராமத்தில் அமைந்துள்ள தனியார் இரசாயன ஆலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

இத்தீவிபத்துக் காரணமாக அருகில் இருந்த மாணவர் விடுதியில் 25 மாணவர்கள் மயக்கம் அடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். தீ ஜுவாலைகள் கரும்புகையுடன் அப்பகுதியை சூழ்ந்தமையால், தொழிற்சாலையில் பணியில் இருந்தவர்களுக்கும் அருகில் இருந்த குடியிருப்புகளில் பலருக்கும் மூச்சுத் திணறல் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டன.

கடுமையான பல மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு தீ அணைக்கப்பட்டது. இந்த தீவிபத்தில் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அன்புள்ள திருடனுக்கு.......!' என விளித்து ஆசையில் ஓர் கடிதம் எழுதிய ஆசிரியர்கள்

கேரள மாநிலத்தில் திருடி செல்லப்பட்ட பென் டிரைவை (pen drive) கேட்டு, திருடனுக்கு பள்ளி ஆசிரியர்கள் கடிதம் எழுதியிருக்கும் விநோதம் நடைபெற்றுள்ளது.

தலச்சேரி தனியார் மேல்நிலைப்பள்ளி ஒன்றில் 7 மாதங்களுக்கு முன்பு தலைமை ஆசிரியர் அறையிலிருந்த 40 ஆயிரம் ரூபாய் ரொக்கம், 30 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய கமரா ஆகியன திருட்டுப் போயின. இதேபோல் அண்மையில் 3 மடிக்கணினிகள், ஒரு பென் டிரைவ், சி.சி.டி.வி. ஹார்டு டிஸ்க் ஆகியவை திருட்டுப்போயுள்ளன. பென் டிரைவில்தான், வருகைப்பதிவேடு உள்ளதால் ஆசிரியர்களுக்கு ஊதியம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து அவர்கள் திருடனுக்கு கடிதம் எழுதி, சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ளனர்.

'அன்புள்ள திருடனுக்கு...' என்று ஆரம்பிக்கும் அந்தக் கடிதத்தில், தங்களுக்கான ஊதியத்தை தீர்மானிக்கும் பென் டிரைவை மட்டும் தந்துவிடும்படி திருடனிடம் ஆசிரியர்கள் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இரண்டு அரச நிறுவனங்களில் இருந்து ஒரே நாளில் 92,700 பேர் விருப்ப ஓய்வு

சென்னை, செ.02

இந்தியாவில் முதல்முறையாக ஒரே நாளில் அரசுத் துறை நிறுவனங்களான பி.எஸ்.என்.எல். மற்றும் எம்.டி.என்.எல். நிறுவனங்களிலிருந்து 92,700 ஊழியர்கள், அதிகாரிகள் விருப்ப ஓய்வு பெற்றனர்.

பி.எஸ்.என்.எல். மற்றும் எம்.டி.என்.எல். நிறுவனங்கள், ஊழியர்களைக் குறைப்பதன் மூலம் செலவைக் குறைக்கலாம் என எண்ணி, விருப்ப ஓய்வுத் திட்டத்தை அறிவித்தன. இந்தத் திட்டத்தின் கீழ் 50 மற்றும் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டது.

பி.எஸ்.என்.எல். நிறுவனத்தில் 78,569 பேரும், எம்.டி.என்.எல். நிறுவனத்தில் 14,378 பேரும் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்தனர். இதனையடுத்து இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் – வெள்ளிக்கிழமையுடன் விருப்ப ஓய்வு பெற்றனர்.

விருப்ப ஓய்வுக்குப் பிறகு பி.எஸ்.என்.எல்லில் 75, 217 பேர் மட்டுமே பணியில் தொடர்கிறார்கள். அந்நிறுவனத்தில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் ஒரே நாளில் வீட்டுக்குத் திரும்பியிருக்கின்றார்கள்.

## பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில்

# 200 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் சிக்கின

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் இரகசிய தகவலின் அடிப்படையில், ஒரு வீட்டை சோதனையிட்ட பொலிஸார் 200 கிலோ ஹெரோயின், கேபின் போன்ற போதைப் பொருள்களைப் பறிமுதல் செய்தனர்.

சர்வதேச சந்தையில் இதன் மதிப்பு (இதிய நாணயக் கணக்கில்) சுமார் 200 கோடி ரூபாயாகும். இந்தச் சம்பவம் தொடர்பாக ஆப்கான் நாட்டைச் சேர்ந்த ஒருவர் உள்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆப்கான் நாட்டைச் சேர்ந்தவர் ஒருவாரம் முன்புதான் இந்தியா வந்துள்ளார்.




மிகப்பெரிய போதைப் பொருள்கள் கடத்தல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பெரும் அளவில் போதைப் பொருள்கள் சிக்கியமை குறித்துச் செய்தியாளர்களிடம் பேசிய பஞ்சாப் முதலமைச்சர் அமரேந்தர் சிங், குற்றவாளிகள் தப்பி விட முடியாது என்றும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikathir



# நடிகை சனம் ஷெட்டியை காதலித்ததும் நிச்சயதார்த்தம் நடந்ததும் உண்மைதான்!



நடிகை சனம் ஷெட்டி கொடுத்த முறைப்பாட்டுக்குப் பதிலாக 'பிக்பாஸ்' புகழ் தர்ஷன் பத்திரிகையாளர்களை சந்தித்து நேற்று விளக்கம் அளித்துள்ளார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் பல்வேறு திரைப் படங்களில் கதாநாயகியாக நடித்து வருபவர் சனம் ஷெட்டி. மொடலிங்கும் செய்து வருகிறார். 'கதம் கதம்', 'சதுரம் 2' உள்ளிட்ட சில தமிழ் படங்களில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ள இவர் அடுத்து 'எதிர்வினையாற்று' படத்தில் நாயகியாக நடித்துள்ளார்.

சனம் ஷெட்டியுடன் மொடலிங் படப் பிடிப்புகளின் போது நடித்தவர் தர்



ஷன். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். 'பிக்பாஸ்' சீசன் 3 இல் பங்கேற்றமையால் பிரபலம் ஆனார். இருவரும் திருமணம் செய்வது பிக்பாஸ் நிகழ்ச்சியால் தள்ளி வைக்கப்பட்டதாகவும் நிகழ்ச்சி முடிந்து பல மாதங்கள் ஆகியும் தர்ஷன் திருமணத்துக்கு மறுக்கிறார் எனத் தெரிவித்து நடிகை சனம் ஷெட்டி காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புகார் அளித்தார்.

இந்த விவகாரம் குறித்து தர்ஷன் நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு: –

நானும் சனம் ஷெட்டியும் காதலித்தது, எங்களுக்கு நிச்சயதார்த்தம் நடந்தது உண்மைதான். முதலில் 'பிக்பாஸ்' நிகழ்ச்சிக்கு செல்ல முயற்சி செய்தவர் அவர்தான். கடந்த சீசனின் போது கலந்து கொள்ள முயற்சி செய்தார். ஆனால் சில நிபந்தனைகள் இருந்தமையால் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை.

நான் முயற்சி செய்யவே இல்லை. ஒரு விளம்பரத்தை பார்த்து விஜய் டிவியில் என்னை 'பிக் பாஸ்' நிகழ்ச்சிக்கு அழைத்தார்கள். அவர்கள் அழைத்த அன்றுதான் எங்களுக்கு நிச்சயதார்த்தம் நடந்தது. என் வீட்டுக்குத் தெரியாமல்தான் நிச்சயதார்த்தம் நடந்தது. படவாய்ப்புகள் பாதிக்கப்படும் என்று இந்த விஷயத்தை வெளியில் சொல்ல வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

நான் பிக்பாஸ் செல்லும் போது

## மனம் திறக்கின்றார் 'பிக்பாஸ்' புகழ் தர்ஷன்

எனது சமூக வலைதளக் கணக்குகளை நிர்வகித்துக் கொள்கிறேன் என்று கேட்டார். நான் வேண்டாம் என்று சொன்னேன். நான் பிக்பாஸ் வீட்டுக்குள் சென்ற பின் என் தங்கையிடம் பேசி என் சமூகவலைத்தள கணக்கு பாஸ்வேர்டுகளை வாங்கிக் கொண்டார். அதில் அவரிட்ட சில பதிவுகளில் எனக்கு உடன்பாடு இல்லை. அந்தப் பதிவுகள் மூலமாகத் தான் எங்கள் காதல் வெளியில் தெரிய வந்தது.

பிக்பாஸ் முடித்து வந்தபின் அவருக்கு என் மீது பொஸசிவ் அதிகமானது. பிற பெண்களுடன் பேசக்கூடாது என்று பிரச்சினை செய்தார். முக்கியமாக பிக்பாஸ் வீட்டுக்குள் என்னுடன் போட்டியாளர்களாக இருந்த பெண்களுடன் நான் பேசக்கூடாது என்று சந்தேகப்பட்டார்.

அவர் சிங்கப்பூரில் வந்து தங்கியது, சேர்ந்து பார்ட்டிக்கு சென்றது எல்லாவற்றுக்கும் என்னிடம் ஆதாரம் இருக்கிறது. ஒரு கட்டத்தில் அவருடன் வாழ முடியாது என்று தெரிந்ததால் பிரிந்து விடலாம் என்று சொன்னேன். அதற்கு அவர் மீடியா முன்பு அறிவிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

ஆனால் நான் அவர் வீட்டுக்கு வந்து பெற்றோரிடம் பேசுவதாகச் சொன்னேன். அவர் இதற்காக இலங்கை வந்து என்னைச் சந்தித்தார். அப்போது என் அம்மா, என் தங்கையின் திருமணம் முடிந்ததும் எங்கள் திருமணத்தைச் செய்து வைப்பதாகக் கூடக் கூறினார்.

ஆனால் ஒரு கட்டத்தில் சனம் ஷெட்டி தற்கொலை செய்துகொள்வேன் என்று மிரட்டத் தொடங்கினார். அதன் பிறகுதான் எங்களுக்குள் சண்டை பெரிதானது. என்னை வைத்து படமெடுக்கத் திட்டமிட்ட தயாரிப்பாளர்களிடம் சென்று எனக்கு வந்த வாய்ப்புகளைத் தடுக்க முயற்சித்தார். அவர் ரூ. 15 லட்சம் எனக்கு கொடுத்தார் எனக் கூறியுள்ளார். அது அப்பட்டமான பொய். அவர் எனக்கு மூன்றரை லட்சம் பணம் கடனாகக் கொடுத்தார். பிக்பாஸ் வீட்டில் இருந்து திரும்பிய பின் அதையும் திருப்பிக் கொடுத்து விட்டேன்.

நான் அவர் மீது எந்த வழக்கும் போட மாட்டேன். ஆனால் என் மீது தவறு இல்லை என்பதை ஆதாரங்களுடன் நிரூபிப்பேன். அவர் எனக்கு நிறைய உதவிகள் செய்துள்ளார். எனவே அவரை அசிங்கபடுத்த விரும்பவில்லை. எனக்கும் ஒரு தங்கை இருக்கிறாள். ஒரு பெண்ணை எந்த சூழ்நிலையிலும் அசிங்கபடுத்த மாட்டேன்.

– இவ்வாறு தர்ஷன் கூறினார்.

# கொரோனா வைரஸ் விடயத்தில் சீனா உலக நாடுகளுக்கு முழு ஒத்துழைப்பு

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளுடன் சீனா முழு ஒத்துழைப்பு



தருவதாகவும், அந்தந்த நாட்டவர்களை அவரவர் சொந்த நாடுகளுக்குத் திரும்ப அனுமதியளித்துள்ளதாகவும் இந்தியாவுக்கான சீனத் தூதர் சன்வெய்டாங் தெரிவித்துள்ளார்.

மிகுந்த பொறுப்புணர்வுடனும் விழிப்புணர்வுடனும் சீனா இப்பிரச்சினையை கையாண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பாதிப்பு தொடர்பான அனைத்துத் தகவல்களையும் உலக சுகாதார அமைப்புடன் சீன அரசு பகிர்ந்து வருவதாகவும் தெரிவித்த சீனத்தூதர், சீனாவின் நடவடிக்கைகள் மீது முழு நம்பிக்கை இருப்பதாக உலக சுகாதார அமைப்புத் தெரிவித்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

நோயால் பாதிக்கப்பட்ட 218 பேர் சிகிச்சைக்குப் பின்னர் குணமாகி வீடு திரும்பினர் எனக் கூறிய சீனத்தூதர், கொரோனா வைரஸ் பரவல் தடுக்கப்படக் கூடியது , கட்டுப்படுத்தக் கூடியது, குணப்படுத்தக்கூடியது என்று தெரிவித்தார்.

# கொரோனா பெயரில் வைரஸ் கணனிகளைத் தாக்குகிறதாம்!



மனித உயிர்களைக் காவு வாங்கிக் கொண்டிருக்கும் சீனாவின் கொரோனா வைரஸ் பீதி உலகம் முழுவதும் பரவி உள்ளது. அந்த வைரஸ் பரவக்கூடாது என்பதில் மற்ற நாடுகள் தீவிர முன்னெச்சரிக்கை எடுத்து வருகின்றன.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் மனிதர்களை மட்டுமல்ல, அந்தப் பெயரில் கம்பியூட்டர்களையும் தாக்கும் வைரஸும் இருப்பதாக என்ஜீனியர்கள் புதிய தகவல்களை தெரிவித்து உள்ளனர் என்று இந்திய செய்தி நிறுவனங்கள் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

இவ்விடயம் குறித்து 'மாலைமலர்' நாளிதழின் இணையம் நேற்று வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கஸ்பெர்ஸ்கை அன்ரி வைரஸ் நிறுவனத்தை சேர்ந்த என்ஜினீயர்கள், கம்பியூட்ர்களில் உள்ள பைல்களில் தீங்கிழைக்கும் கொரோனா வைரஸைக் கண்டுபிடித்து உள்ளனர்.

இது பி.டி.எவ்., எம்.பி.4 மற்றும் டொக்மென்ட் பைல்களை தாக்கி இருப்பதாக தெரிவித்து உள்ளனர். இது குறித்து என்ஜீனியர்கள் கூறியவை வருமாறு:–

கொரோனா வைரஸ் மனிதர்களை மட்டுமல்ல, கம்பியூட்டகளையும் தாக்குகிறது. தற்போது கொரோனா வைரஸ் பற்றி பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

ஆனால் இந்த வைரஸ் ஏற்கனவே சைபர் கிரிமினல்கள் பயன்படுத்தி உள்ளனர். இதுவரை நாங்கள் 10 வைரஸ் பைல்களைப் பார்த்துள்ளோம். இந்த கொரோனா வைரஸ் பைல்கள் வளரும் தன்மை கொண்டவையாக இருக்கலாம் என்று கருதுகிறோம். கொரோனா வைரஸ் போலியான டொக்மென்ட்டுகள் மூலம் மறைந்து பரவும். – என்றனர்.

– இப்படி 'மாலைமலர்' மேலும் தெரிவித்தது.

# வுகானில் நகரில் மட்டும் வைரஸ் 75 ஆயிரம் பேரில் தொற்றியுள்ளது?



கொரோனா வைரஸால் சீனாவின் வுகான் நகரில் மட்டும் 75 ஆயிரத்து 800 பேர் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

இதனால் சீனாவின் முக்கிய நகரங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் இறுதி வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சீனாவின் வுகான் நகரில் பரவியுள்ள வைரஸ் சீனாவின் இதர பல முக்கிய நகரங்களுக்கு எளிதாகப் பரவ வாய்ப்புள்ளதாக ஹாங்காங் பல்கலைக்கழக மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் சீனாவுக்குப் பயணம் செய்ய வேண்டாம் என தங்கள் குடிமக்களுக்குக் கட்டுப்பாடு விதித்துள்ளன. இதற்குக் கடும் அதிருப்தி தெரிவித்துள்ள சீனா, தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று கோரியுள்ளது.

# சீனாவில் தன் கிளைகளை மூடியது அப்பிள் நிறுவனம்!

*பெய்ஜிங்,பெப்.02*

*கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக சீனாவில் உள்ள கிளைகளை அப்பிள் நிறுவனம் மூடியுள்ளது.*


*கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, சீனாவில் உள்ள தனது நிறுவனத்தின் கோர்ப்பரேட் அலுவலகங்கள், தொடர்பு மையங்கள், களஞ்சியம் ஆகியவற்றை மூடுவதாக அப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது. வரும் பெப்ரவரி 9 ஆம் தேதி வரை தனது நிறுவனத்தின் மையங்கள் மூடியிருக்கும் என்று அப்பிள் அறிவித்துள்ளது. சுகாதார நிபுணர்களின் அறிவுறுத்தலின் படி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அப்பிள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*



காலைக்கதிர்
Kalaikathir



# பெண்களுக்கு விடுதலை தந்த 'சிங்கர்' தையல் மெஷின்கள்



‘நச்சுத்தன்மையுள்ள ஆண்மை’ (Toxic Masculinity)க்கு எதிராகப் பேசுகிறது கில்லட் விளம்பரம்.

இருபால் அடையாளங்களில் சேராத, உறுதியான பாலின அடையாளம் இல்லாதவர்கள் தங்கள் அடையாளம் பற்றி பெருமையாக உணர ஊக்குவிக்கும் வகையில் சிறப்பான கோப்பைகளை அறிமுகப்படுத்தியுள்ளது பட்வைசர் மதுபான நிறுவனம்.

பெரு நிறுவனங்கள் முற்போக்கான சமூக லட்சியங்களுக்காக செயல்படுவது 'வோக் கேபிடலிசம்' (woke capitalism) என்று அழைக்கப்படுகிறது. இதற்காக காட்டப்படும் எடுத்துக்காட்டுகளில், சில நிறுவனங்கள் காலத்தின் தேவைக்கு ஏற்ப செயல்படுவனவாகப் பகட்டாக காட்டிக் கொள்ளலாம். ஆனால், நீங்கள் நினைக்கும் அளவுக்கு இந்த வோக் கேபிடலிசம் புதிய விவகாரம் அல்ல.

1850 இல், சமூக முன்னேற்றம் நெடுந்தூரம் செல்லவேண்டிய நிலைமையில் இருந்தது.

அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னதாக, அமெரிக்க பிரசாரகர் எலிசபெத் கேடி ஸ்டான்ட்டன் என்பவர் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து, மகளிர்




உரிமை மாநாட்டில் பேசி சர்ச்சையை உருவாக்கினார். அது ரொம்பப் பெரிய ஆசை என்று அவருடைய ஆதரவாளர்களே கூடக் கருதினர்.

இதற்கிடையில் பொஸ்டன் நகரில், திரையில் வெற்றி பெற முடியாத ஒரு நடிகர் ஒரு கண்டுபிடிப்பாளராக தன் அதிர்ஷ்டத்தை பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

ஒரு பட்டறை ஷோரூமில் சிறிய இடத்தை அவர் வாடகைக்கு எடுத்திருந்தார். மரத்தில் எழுத்துகளை செதுக்குவதற்கு தனது மெஷினை விற்பது அவருடைய திட்டமாக இருந்தது. ஆனால், மரத்தில் எழுத்துருக்களை செதுக்குவது அப்போது வழக்கொழியத் தொடங்கிவிட்டது. அந்த இயந்திரம் நுட்பமான தொழில்நுட்பம் கொண்டது. ஆனால் அதை வாங்க யாரும் விரும்பவில்லை.

நம்பிக்கை இழந்திருந்த அவரை, விற்க முடியாமல் கிடந்த தையல் மெஷின்களை பார்க்கும்படி அந்த பட்டறையின் உரிமையாளர் அழைத்தார். அது சரியாக விற்கவில்லை. பல தசாப்தங்களாக பலர் முயற்சி செய்தும், அந்த மெஷினை விற்பனைக்கு ஏற்ற அளவில் யாராலும் தயாரிக்க முடியவில்லை.

## ஐசக் மெரிட் சிங்கர்

வாய்ப்புத் தெளிவாக இருந்தது. தையல் பெண்மணிகளுக்கு அதிக சம்பளம் தர வேண்டியிராத காலம் அது . நியூயோர்க் ஹெரால்டு பின்வருமாறு கூறியிருந்தது: “தங்கள் வேலைக்கு மிகக் குறைந்த அளவு ஊதியம் தரப்படும் வேறு பெண் தொழிலாளர்கள் இல்லை அல்லது கடினமாக உழைக்கும் வேறு பெண்களை பார்த்திருக்க முடியாது” என்று அந்தப் பத்திரிகை கூறியுள்ளது. ஆனால், துணி தைக்க அதிக நேரம் தேவைப்பட்டது – ஒரு சட்டை தைக்க 14 மணி நேரம் ஆனது. எனவே வேகமாக துணி தைக்க ஏதாவது செய்ய முடியுமா என்ற தேவை அப்போது இருந்தது.

தையல் பெண்மணிகளுக்கு மட்டும் தான் அந்தச் சிரமம் என்றில்லை. பெரும்பாலான மனைவியரும், மகள்களும் துணி தைக்க வேண்டும் என அப்போது எதிர்பார்க்கப் பட்டது. சமகால எழுத்தாளர் சாரா ஹாலே கூறியுள்ளபடி, அந்த “ஒருபோதும் முடிவுறாத – எப்போதும் தொடக்கமாகவே உள்ள” அந்த வேலையானது பலரையும் “சர்வகாலமும் துயரத்திலேயே இருக்கும் நபர்களாக” ஆக்குவதாக இருந்தது.

இளமை வயதை எட்டியதை விழாவாக கொண்டாடும் ஜப்பானியர்கள்.

உலகில் முதல் ஐந்து அழகிப் பட்டங்களை வென்று சாதனை படைத்த கறுப்பினப் பெண்கள்

பொஸ்டன் தொழிலகத்தில், கண்டுபிடிப்பாளர் அந்த மெஷினைப் பார்த்து சொன்னார்: *“பெண்களை அமைதியாக வைத்திருக்கும் ஒரே விஷயத்தையும் மாற்றிவிட நீங்கள் விரும்புகிறீர்கள்”* என்று கூறினார்.

திரையில் தோற்றுப் போய், கண்டுபிடிப்பாளராக மாறிய அந்த நபர் ஐசக் மெர்ரிட் சிங்கர். பகட்டாக உடுத்தக் கூடிய, கவர்ச்சியுள்ள மற்றும் தாராள சிந்தனை உள்ளவராகவும், அதேசமயம் கடுமையானவராகவும் இருந்தார்.

முதல் சிங்கர் தையல் மெஷின் 1851 பேடண்ட் உரிமை பெற்றது

திருத்த முடியாத அளவுக்கு, நிறைய பெண்களுடன் காதல் கொண்டவராக இருந்த அவர் குறைந்தது 22 குழந்தைகளுக்குத் தந்தையானார்.

பல ஆண்டுகளாக அவர் மூன்று குடும்பங்களைப் பராமரித்து வந்தார். மூன்று பேருக்குமே, மற்ற இரு குடும்பங்களைப் பற்றி தெரிந்திருக்கவில்லை. இருந்தாலும் இன்னொருவரையும் அவர் திருமணம் செய்து கொள்வார். அவர் தன்னை அடித்தார் என்று யாராவது ஒரு பெண் புகார் சொல்வார்.

அவருடைய நடத்தை சில பெண்களுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தியது என்றாலும், இயல்பாக சிங்கர் மகளிர் உரிமைகளுக்கு குரல் கொடுப்பவர்

அவருடைய வாழ்க்கை வரலாறை எழுதிய ரூத் பிரான்டன், “பெண்ணிய இயக்கத்துக்கு உறுதியாக முதுகெலும்பை உருவாக்கிய மனிதர்” என்று அவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

தையல் மெஷினுக்கான அடிப்படையான மாதிரியை சிங்கர் உருவாக்கினார்.

“ஊடூசி வட்டமான பாதையில் அசைவதற்குப் பதிலாக, அது நேர்க்கோட்டில் முன்னும் பின்னும் செல்லும் வகையில் வடிவமைக்க விரும்புகிறேன். ஊசியின் பட்டை, வளைவான ஊசியை கிடைமட்டமாக நகர்த்துவதற்குப் பதிலாக, நேரான ஒரு ஊசி மேலும் கீழும் செல்வது போல உருவாக்க விரும்புகிறேன்” என்று தொழிலகத்தின் உரிமையாளரிடம் அவர் கூறினார்.

சிங்கர் தனது மெஷின்களுக்கு காப்புரிமை பெற்று, விற்பனை செய்யத் தொடங்கினார். அது




மிகுந்த வரவேற்பைப் பெற்றது. முதலாவது வடிவமைப்பு நன்கு செயல்பட்டது. ஒரு மணி நேரத்தில் ஒரு சட்டையைத் தைக்க முடிந்தது.

துரதிருஷ்டவசமாக, மற்ற கண்டுபிடிப்பாளர்களால் உருவாக்கப்பட்ட மற்ற கருவிகளையும் அது சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. பள்ளம் உள்ள, கண் போன்ற துளையுள்ள ஊசி, முடிச்சு போடும் தையல், துணியை உள்ளே தள்ளுவதற்கான நுட்பம் கொண்டவை என பல அப்போது பயன்பாட்டில் இருந்தன.

1850களின் “தையல் மெஷின் போர்” நடந்த காலத்தில், தையல் மெஷின் தயாரிப்பாளர்கள், தங்கள் மெஷின்களை விற்பதைவிட பிற தயாரிப்பாளர்கள் மீது காப்புரிமை மீறியதாக வழக்குப் போடுவதில்தான் அவர்கள் தங்கள் நேரத்தை செலவிட்டுக் கொண்டிருந்தனர்.

கடைசியில் ஒரு வழக்குரைஞர் அவர்களை ஒன்று சேர்த்தார். ஒரு நல்ல தையல் மெஷினை உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து அம்சங்களும் நான்கு தரப்பினரிடம் இருந்தன. அவற்றுக்கு லைசென்ஸ் வாங்கி, ஒன்றாக பயன்படுத்தி ஏன் தைக்கக் கூடாது என யோசித்தார்.

சட்டப் போராட்டங்களில் இருந்து விடுபட்டு, தையல் மெஷின் மார்க்கெட் சூடு பிடித்தது – அதில் சிங்கர் ஆதிக்கம் செலுத்தியது. போட்டியாளர்களை விட அவருடைய தொழிற்சாலைகள் எப்படி வித்தியாசமாக இருந்தன என்பது பலருக்கும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது.

தனிப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி, மாற்றிக் கொள்ளக் கூடிய பாகங்களைக் கொண்டதாக இருந்த “அமெரிக்க முறையிலான” மெஷின் என்ற வகையில் மற்றவர்கள் தயாரித்தனர். அப்போதும் இந்த நடைமுறைக்கு சிங்கர் மாறுவற்கு தாமதமானது. கைகளால் தயாரிக்கப்பட்ட பாகங்களையும், கடைகளில் வாங்கப்பட்ட போல்ட்,



நட்களையும் கொண்டு அவருடைய மெஷின்கள் தயாரிக்கப்பட்டன.

ஆனால் சிங்கரும், அவருடைய வர்த்தக பங்காளர் எட்வர்ட் கிளார்க்கும் வேறொரு வழியில் முன்னோடிகளாக இருந்தனர். சந்தைப்படுத்துதலில் அவர்கள் முன்னோடிகளாக இருந்தனர்.

தையல் மெஷின்கள் விலை அதிகமாக இருந்தது. சராசரி குடும்பம் பல மாதங்கள் சேமித்தால் தான் அதை வாங்க முடியும் என்றிருந்தது.

மெஷின்களை தவணை கட்டணத்தில் அளிக்கும் திட்டத்தை கிளார்க் முன்மொழிந்தார். குடும்பத்தினர் மாதம் சில டொலர்கள் வாடகைக்கு அந்த மெஷின்களை எடுத்துக் கொள்ளலாம். வாடகையாக அவர்கள் செலுத்திய பணம், மெஷினின் விலையை எட்டிவிட்டால், அந்த மெஷின் அவருக்குச் சொந்தமாகிவிடும்.

முந்தைய ஆண்டுகளில் இருந்த மெதுவாகத் தைக்கும், அதிகம் நம்பியிருக்க முடியாத மெஷின்களில் இருந்து அவர்கள் விடுபடுவதற்கு இது உதவிக்கரமாக இருந்தது. சிங்கர் நிறுவனத்தின் ஏஜென்ட்களும் அதற்கேற்ப பணியாற்றினர். மெஷினை வாங்கும் போது, அதை பொருத்திக் கொடுப்பதுடன், அது நன்கு செயல்படுகிறதா என பார்ப்பதற்கு அவ்வப்போது சென்று வந்தனர்.

அப்போதும் சந்தைப்படுத்தலில் ஒரு பிரச்சினை இருந்தது. பெண்ணின வெறுப்பு என்ற ரூபத்தில் பிரச்சினை வந்தது.

## தையல் மெசினை திருமணம் செய்ய முடியும்போது...

இதற்கு இரண்டு கார்ட்டூன்களை ஸ்டான்டன் உருவாக்கினார். ஒரு தையல் மெஷினை உங்களால் திருமணம் செய்து கொள்ள முடியும் என்ற நிலையில், ஏன் “தையல் மெஷினை” வாங்குகிறீர்கள் என்று ஓர் ஆண் கேட்பது போல ஒரு கார்ட்டூன் இருந்தது.

பெண்கள் தங்களது “அறிவை வளர்த்துக் கொள்ள” கூடுதல் நேரம் கிடைக்கும் என்று விற்பனையாளர் சொல்வது போல இன்னொரு கார்ட்டூன் இருந்தது. அதில் சொல்ல வந்த விஷயம் புரிந்து கொள்ளப்பட்டது.

( 09 பக்கம் பார்க்க)

## பெரியபுலத்தில் மெய்வன்மை நிகழ்வு

யாழ்ப்பாணம், பெ.02

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி முதல் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய முதல்வர் ந.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பழைய மாணவரும், கண்ணன் கோஷ்டி இசையமைப்பாளருமான இசைவாணர் முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகவும், கிருபா லேணர்ஸ் அதிபர் தேசபந்து, தேசகீர்த்தி லயன் அ.கிருபாகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

## ‘சமாதான தீபம்’ நூல் வெளியீடும் கௌவிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், பெப்.02

வட இலங்கை சமாதான நீதிவான் சங்கத்தின் ‘சமாதான தீபம்’ வெளியீடும் கௌரவிப்பும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் கா.பீ. ஜெயவிந்தன் தலைமையில் நடைபெறும்.

பிரதம அதிதியாக கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும், கௌரவ அதிதிகளாக யாழ் அரச அதிபர் நா.வேதநாயகன், முல்லைத்தீவு அரச அதிபர் திருபதி றூபவதி கேதீஸ்வரன் மற்றும் கேதீஸ்வரன், மன்னார் அரச அதிபர் சி.ஏ.மோகன் ராஜ், யாழ் தேசியக் கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

‘சமாதான தீபம் மலரின் வெளியீட்டுரையை யாழ் தேசியக் கல்வியியல் கல்லூரின் ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் நிகழ்த்த முதற் பிரதியை கலாநிதி திருமதி செல்லத்துரை இராஜேஸ்வரி பெற்றுக் கொள்வார்.

விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறும்.

## பெண்களுக்கு விடுதலை தந்த...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி )

விலை உயர்ந்த இந்த மெஷின்களைப் பெண்களால் இயக்க முடியுமா என்ற சந்தேகங்கள் எழுந்தன.

தன் சொந்த வாழ்க்கையில் பெண்களை எந்த அளவுக்கு மரியாதைக் குறைவாக நடத்தியிருந்தாலும், இந்த மெஷினை பெண்கள் பயன்படுத்தலாம் என்பதை நிரூபிப்பதில்தான் அவருடைய வியாபாரம் சார்ந்திருந்தது.

நியூயோர்க் பிராட்வே பகுதியில் ஒரு கடையை அவர் வாடகைக்கு எடுத்து, இந்த மெஷின்களை எப்படி பயன்படுத்துவது என்று காட்டுவதற்காக சில இளம் பெண்களை பணிக்கு அமர்த்தினார். அங்கு நல்ல கூட்டம் கூடியது.

முடிவெடுக்கும் நபர்களாக பெண்கள் உருவாகலாம் என்பதாக சிங்கரின் விளம்பரங்கள் இருந்தன. “தயாரிப்பாளரால் நேரடியாக குடும்பத்தின் பெண்களுக்கு விற்கப்படுகிறது” என்று விளம்பரம் செய்தார். பெண்கள் நிதி சுதந்திரம் பெற ஆசைப்பட வேண்டும் என்ற அர்த்தத்தை அது உருவாக்கியது. “நல்ல பெண் தையல் தொழிலாளி ஆண்டுக்கு ஆயிரம் டொலர் சம்பாதிக்க முடியும்” என்று விளம்பரம் செய்தார்.

1860 ஆம் ஆண்டு வாக்கில் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை இப்படி புகழ்ந்தது: வேறு எந்த கண்டுபிடிப்பும் நமது தாய்மார்கள் மற்றும் மகள்களுக்கு “இவ்வளவு பெரிய விடுதலையை” அளிக்கவில்லை என்று எழுதியது. தையல் பெண்மணிகள், “குறைவான உழைப்பில், நல்ல வருமானத்தை” ஈட்டத் தொடங்கினர்.

அப்போதும், ‘‘ஆணின் புத்திசாலித்தனமான கண்டுபிடிப்பு” என்று கூறி, தி டைம்ஸ் பத்திரிகை பாலின பெருமை பேசியது.

ஒரு பெண்மணியை நாம் கேட்டால் தெரிந்துவிடும். 1860ல் வெளியான Godey's Lady's Book and Magazine இல் சாரா ஹாலே இப்படி கூறியுள்ளார்: “ஊசியுடன் வாழ்ந்த பெண்மணி, இரவில் ஓய்வெடுக்க முடிகிறது. குடும்ப வேலைகளை கவனிக்கவும், மகிழ்ச்சியான விஷயங்களில் ஈடுபடவும் பகல் பொழுதில் பெண்ணுக்கு நேரம் கிடைக்கிறது. இது உலகிற்கு பெரிய லாபம் இல்லையா?” – என்று அவர் கூறியுள்ளார்.

வோக் கேபிடலிசம் என்னும் ’முற்போக்கு முதலாளித்துவம்’ பற்றி இன்றைய காலக்கட்டத்தில் நிறைய சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. அதிக அளவில் பீர் மற்றும் ரேஸர்களை விற்பவையாக அவை உள்ளன, சரிதானா? சில்லறை வருமானங்களில் தாம் அக்கறை காட்டுவதாக சிங்கர் கூறினார்.

மிக உயர்வான சுய அக்கறையுள்ள உந்துதல்களால் சமூக முன்னேற்றத்தை முன்னெடுக்க முடியும் என்பதற்கு அவர் நிரூபணமாக இருக்கிறார்.

# கூட்டமைப்புக்கு எதிரான மாற்றுத் தலைமை சாம்பார் கூட்டணியாக இருக்க முடியாது!

## கூறுகின்றார் சிறிகாந்தா




யாழ்ப்பாணம், பெப். 02

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றீடாக உருவாக்கப்பட்ட மாற்றுத் தலைமை கொள்கை ரீதியானதாக இருக்கவேண்டுமே தவிர சாம்பார் கூட்டணியாக இருக்கக்கூடாது எனத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

அத்தடன், தமிழ்த் தேசியக் கட்சி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் எனவும் அவர் கூறினார்.

நல்லூரில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கட்சி அலுவலகத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றீடாக புதிய மாற்றுத் தலைமையை உருவாக்க முயற்சிகள் பல முனைகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனினும் அந்த முயற்சியானது கொள்கை அடிப்படையில் இருக்க வேண்டுமே தவிர வெறுமனே பதவி ஆசைக்காகவும் நாற்காலிகளுக்காகவும் உருவாக்கப்படுவதாக இருக்கக்கூடாது.

உருவாக்கப்படும் கூட்டணியானது சாம்பார் கூட்டணியாக இருக்கக்கூடாது. மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய பலமான ஒரு கூட்டணியாக இருக்க வேண்டும் என்றே நாம் எதிர்ப்பார்க்கின்றோம்.

எனவே நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாம் தனித்துப் போட்டியிடுவது என்று தீர்மானித்துள்ளோம். அவ்வாறு தனித்துப் போட்டியிடும்போது கொள்கை அளவில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து பயணிப்பதற்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம். மேலும் தனித்துப் போட்டியிடுவதாக இருந்தால் அதற்கும் தயாராக இருக்கின்றோம். மக்கள் எம்மை தோற்கடித்தாலும் பரவாயில்லை. நாம் கொள்கையில் உறுதியாக இருப்போம்.

தற்போதைய நிலைவரத்தின்படி எமது கட்சி தனித்துப் போட்டியிடுவதாக இருந்தால் நான் திருகோணமலை மாவட்டத்திலும் எனது கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவாஜிலிங்கம் யாழ்ப்பாணத்திலும் போட்டியிடுவது என உத்தேசித்துள்ளோம். அதற்கான முடிவை எமது கட்சி விரைவில் கூடி ஆராயும்.

எனவே எம்முடன் பயணிக்க விரும்பும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய தேசியக் கட்சிகளுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம் – என்றார். (ஐ – 07)

## யாழ்ப்பாணம், வவுனியாவில் பட்டப்படிப்பு நிறுவனங்கள்!

வவுனியா, பெப். 02

உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் வவுனியா, யாழ்ப்பாணம், தெஹிவளை, மட்டக்குளி, காலி, அம்பாறை ஆகிய நிலையங்களில் பட்டப்படிப்பு ஆரம்பிக்கப் படவுள்ளது என ராஜாங்க அமைச்சர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதுள்ள கற்கைத் துறைகளில், எட்டுத் துறைகளுக்கு பட்டம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

இதேவேளை, இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தைப் பட்டம் வழங்கும் நிறுவனமான மாற்ற அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படவுள்ளது

இந்த வருடத்தில் இலங்கை உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்துக்கு இணைத்துக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை 20,000 வரை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

## உலக சுகாதார அமைப்பு இலங்கை அரசுக்கு ஆதரவு

கொழும்பு, பெப். 02

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அரசு முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களுக்கு உலக சுகாதார அமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளதாக அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

மேலும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் சிகிச்சை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பணியாளர்கள் உள்ளிட்டோரின் பாதுகாப்புக்காக சுகாதார அமைச்சு 6 கோடி ரூபா பெறுமதியான பாதுகாப்பு உபகரணங்களை வழங்கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் உலக சுகாதார அமைப்பு, கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக உபகரணங்களை வழங்குவதற்கு முன்வந்திருப்பதாக சுகாதார அமைச்சுக்கு அறிவித்திருப்பதாகவும் அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உலக சுகாதார ஸ்தாபனம், கொரோனா வைரஸின் தாக்கத்தை உலகளாவிய சுகாதார நெருக்கடி நிலையாக அறிவித்துள்ளமை தொடர்பாக அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் கூறினார். (ஐ)

## சீனாவில் சிக்கியிருந்த 33 மாணவர்கள் மீட்பு!

கொழும்பு, பெப். 02

சீனாவின் வுகானில் சிக்கியிருந்த 33 இலங்கை மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை பத்திரமாக மீட்டுக் கொண்டு வந்த விமானம் நேற்றுக் காலை மத்தளவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

அவர்கள் சிறப்பு பஸ் மூலம் தியத்தலாவ இராணுவ முகாமில் உள்ள தடுப்பு மையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் 14 நாள்களுக்கு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

புதிய கொரோனா வைரஸ் பரவியதன் விளைவாக வுகானை வெளித் தொடர்புகளின்றி மூடச் சீன அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தமையை அடுத்து, அங்கு சிக்கியிருந்த இலங்கை மாணவர்களை மீட்கச் சீன அரசுடன், இலங்கை அதிகாரிகள் பேச்சை தொடங்கியிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடல்களின் விளைவாக, காட்டுநாயக்கிலிருந்து இலங்கை ஏர்லைன்ஸ் விமானம் (யுஎல் – 1423) நேற்று முன்தினம் வுகானில் சிக்கியிருந்த இலங்கையர்களை மீட்க சிறப்புப் பயிற்சி பெற்ற குழுவினருடன் புறப்பட்டது.

இலங்கையர்களை ஏற்றிக் கொண்டு, உள்ளூர் நேரம் அதிகாலை 2 மணியளவில் வுகானில் உள்ள தியானாங் விமான நிலையத்திலிருந்து இலங்கை நோக்கி புறப்பட்டது.

இதற்கிடையில், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளைக் குணப்படுத்த மேற்கு மற்றும் சுதேச மருத்துவத் துறையில் நிபுணர்களை அழைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சுகாதார, வெளியுறவு, சுற்றுலா மற்றும் உயர் கல்வி அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை ஜனாதிபதி நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் அழைத்தார்.

வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான நாட்டின் அனைத்து துறைகளின் ஆதரவையும் அர்ப்பணிப்பையும் ஜனாதிபதி பாராட்டினார்.

சீனாவிலிருந்து மாணவர்களைத் திரும்ப அழைத்து வர நிபுணர் குழு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் ஜனாதிபதி பாராட்டினார்.

வுகானில் இருந்து வரும் மாணவர்களை மிகுந்த கவனத்துடனும், ஆறுதலுடனும் கவனிக்குமாறு அறிவுறுத்திய ஜனாதிபதி, சுற்றுலாத் துறையை பாதுகாக்கவும், தற்போதைய நிலைமையை நிவர்த்தி செய்யவும் ஜனாதிபதி ஊடக பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது – என்றார்.

# ஐ.தே.க. சரிவை நோக்கி செல்வதற்கு ரணிலின் பதவி ஆசையே காரணம்!

## அஜித் பெரேரா குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 2

மக்கள் செல்வாக்கை அதிகம் பெற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சி தற்போது அழிவுப் பாதைக்கே சென்று கொண்டிருக்கின்றது. இதற்குக் காரணம் ரணில் விக்கிரமசிங்கவின் பதவி ஆசையே ஆகும்.

– இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்ட சஜித் அணியின் முக்கியஸ்தரான நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா.

அவர் மேலும் கூறுகையில் –

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு ரணிலின் பதவி ஆசையை மீண்டும் நிறைவேற்றியுள்ளது. அவரின் ஆதரவாளர்கள் மட்டுமே மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் கட்சியின் தலைமைப் பதவியில் தொடர அனுமதி வழங்கியுள்ளார்கள். இதை ஒருபோதும் ஏற்கவே முடியாது. ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமைப் பொறுப்பை மட்டும் அவர்கள் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கியுள்ளார்கள்.

இந்தத் தீர்மானத்தை சஜித் ஏற்கமாட்டார் என்றே நம்புகின்றோம். எனவே, அவர் தலைமையில் புதிய அரசியல் முன்னணி உருவாக வேண்டும். அந்தப் புதிய முன்னணி நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டால் மாபெரும் வெற்றியைப் பெற முடியும்.

ஐ.தே.கவின் தலைவராக ரணில் இருக்கும் வரைக்கும் அக்கட்சி முன்னோக்கிய பாதையில் செல்லாது. அழிவுப் பாதையிலேயே தொடர்ந்து செல்லும் – என்றார். (ஐ)

# செயற்பாட்டு இயக்குநர்கள் நியமனங்கள் அரசால் இரத்து

கொழும்பு, பெப். 02

அரச நிறுவனங்களின் சபைகள் மற்றும் மன்றங்களுக்கு நியமிக்கப்பட்ட செயற்பாட்டு உறுப்பினர்கள் ( Working Director)அனைவரின் நியமனங்களையும் இரத்துச் செய்யுமாறு நிதியமைச்சு அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

ஏற்கனவே இந்த பதவிநிலை எவருக்கும் வழங்கப்படக் கூடாதென ஜனாதிபதி அறிவித்திருந்தபோதும் சில இடங்களில் இப்படியான நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே செயற்பாட்டு இயக்குனர் என்ற பதவி வழங்கப்படக் கூடாதென அறிவுறுத்தியுள்ள நிதியமைச்சு அப்படி வழங்கப்பட்டவைகளை இரத்துச் செய்யுமாறும் கேட்டுள்ளது. (ஐ)

# சீனத் தொழிலாளர்களுக்கு வெளியே நடமாடத் தடை!

கொழும்பு, பெப். 02

இலங்கையில் கட்டட நிர்மாணப் பணிகளில் தொழிலாளர்களாகப் பணிபுரியும் அனைத்துச் சீன தொழிலாளர்களையும், அவர்களது உறைவிடத்தில் அல்லது கட்டுமானத் தளங்களில் இருந்து வெளியே செல்வதைத் தவிர்க்குமாறு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் அச்சத்தினால் சீனர்கள் மீது இலங்கையர்கள் பாகுபாடு காட்டுவதாக எழுந்த குற்றச்சாட்டுகளை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கொரோனாவைப் பயன்படுத்தி சீன எதிர்ப்பை உருவாக்காதீர்!

## மஹிந்த அமரவீர கோரிக்கை



கொழும்பு, பெப். 02

கொரோனா வைரஸை பயன்படுத்தி சீன எதிர்ப்பு அலையை எவரும் உருவாக்க வேண்டாம் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டிலுள்ள ஏனைய வைரஸ்கள் தொடர்பில் தற்போது எவரும் பேசுவதில்லை. ரஞ்சன் ராமநாயக்கவின் செயற்பாடுகளை மறந்துள்ளனர். தினம்தினம் நாட்டில் பலர் டெங்கு நோய்க்கு உள்ளாகுகின்றனர். கொரோனா வைரஸ் போன்று டெங்குவை ஒழிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிலர் சீன நாட்டவரைக் கண்டால் அருகில் செல்லவும் அச்சப்படுகின்றனர். இந்த நாட்டில் பல வருடங்களாக வசிக்கும் சீனர்களைக் கண்டாலும் அச்சமடைகின்றனர். வேலைத்தளங்களிலும் சீனர்கள் அருகில் எவரும் செல்வதில்லை. அவ்வாறு எவரையும் ஒதுக்கி வைப்பது நல்லதல்ல.

சீனா இலங்கைக்கு பாரிய உதவிகளை வழங்கியுள்ளது. அவற்றை மறக்கக் கூடாது. இன்றளவும் பாரிய அபிவிருத்திகளையும் உதவிகளையும் முதலீடுகளையும் சீனா இலங்கைக்கு வழங்குகிறது. அவர்களுடைய நாட்டில் ஒரு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அது உலகளாவிய ரீதியில் பரவலடைகிறது.

எமது நாட்டுக்குகள் வைரஸ் பரவாமல் இருப்பதை தடுக்கவே நாம் செயற்பட வேண்டும். சர்வதேசத்துடன் சிறந்த உறவை நாம் கட்டியெழுப்பியுள்ளோம் – என்றார். (ஐ)

# கண்கள் ஊடாகவும் கொரோனா பரவும்

கொழும்பு, பெப். 02

கொரோனா வைரஸ் கண்கள் ஊடாகத் தொற்றுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளதாக தேசிய கண் வைத்தியசாலையின் கண் தொழில்நுட்பவியலாளர் சமித் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸின் தாக்கம் 23 நாடுகளில் காணப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையிலும் கொரோனா வைரஸ் தொற்றினைத் தடுப்பதற்கு பல முன்னெச்சரிக்கையை அரசு மேற்கொண்டு வருகின்றது. இந்நிலையிலேயே கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக கண் தொழில்நுட்பவியலாளர் சமித் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

கொரோனா வைரஸ் தொற்றிய ஒருவர் தும்மினால், இருமினால் அல்லது எச்சில் துப்பினால் ஆரோக்கியமாக இருக்கும் நபரொருவரின் கண் ஊடாக உடலுக்குள் செல்லும் ஆபத்து காணப்படுகின்றது. இதனால் வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முககவசம் பயன்படுத்துவதும் பயனற்ற ஒன்றாக மாறி வருகின்றது. இதனால் மக்கள் அனைவரும் தங்களது ஆரோக்கியம் தொடர்பாக மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# ஐக்கிய தேசிய முன்னணி அரசில்தான் வடக்குப் பாடசாலைகள் அபிவிருத்தி

## கூறுகின்றார் விஜயகலா

யாழ்ப்பாணம், பெப். 02

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில்தான் வடக்கு மாகாணப் பாடசாலைகள் அபிவிருத்தி அடைந்தன என முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி கெற்பேலி தமிழ்க் கலவன் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2009 ஆம் ஆண்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த அரசானது அதன் பின்னர் வடக்கு மக்களின் அபிவிருத்தி தொடர்பில் கரிசனை காட்டாது வடக்கு மக்களை புறந்தள்ளியே வந்தது.

எனினும் 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசின் மூலமே வடக்கு மாகாணப் பாடசாலைகள் அபிவிருத்தி அடைந்தன. அதிலும் மைதானங்கள், கட்டடங்கள் போன்றன வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற திட்டத்தின் மூலம் நல்லாட்சி அரசில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

பெருமளவான நிதியானது கல்விக்கு ஒதுக்கப்பட்டு வடக்கு மாகாணத்தின் கல்வி நிலையை முன்னேற்றுவதற்கு கடந்த நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுத்தது – என்றார். (ஐ-07)







# சத்தியாக்கிரக சரித்திரத்தில் வைக்கம் ஏற்படுத்திய தாக்கம்

வைக்கம் போராட்டம் அல்லது ‘வைக்கம் சத்தியாக்கிரகம்’ என்பது 1924 - 1925 ஆம் ஆண்டுகளிலான காலகட்டத்தில் பிரித்தானிய இந்தியாவின் திருவாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள வைக்கம் என்ற ஊரில் தீண்டாமைக்கு எதிராக நடைபெற்ற போராட்டம். வைக்கம் ஊரில் இருந்த சோமநாதர் கோயிலைச் சுற்றியிருந்த தெருக்களை அவர்ணசாதியினர் பயன்படுத்தக்கூடாது என்ற தடையை நீக்க இப்போராட்டம் நடத்தப்பட்டது.

இந்நிலையை எதிர்த்துக் குரல் கொடுக்கக் கூட யாரும் தயாராக இல்லை. இந்நிலையில் ஸ்ரீ நாராயண குருவின் சீடரும், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்தவருமான டி. கே. மாதவன் என்பவர் இப்பிரச்சனைக்காகப் போராட முன் வந்தார். அவர் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்தவர்களை ஒன்று திரட்டினார். இதற்காக 1924 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் நாள் காலை 6 மணிக்குப் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இவர்களது திட்டம் அரசுக்குத் தெரிந்த போது காவல்துறையின் மூலம் தடை விதிக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தை நடத்த தாழ்த்தப்பட்ட மக்கள் விரும்பவில்லை. அவர்கள், இப்போராட்டத்தினால் தங்களுக்குக் கிடைத்து வரும் சில சலுகைகள் கிடைக்காமல் போய்விடும் என்று அச்சம் கொண்டனர். இதனால் இப்போராட்டத்தில் நம்பிக்கையின்றியும் இருந்தார்கள்.

டி. கே. மாதவன் காவல்துறையின் தடையை மீறி ஊர்வலமாகச் சென்று இப்போராட்டத்தை நடத்துவதென முடிவு செய்தார். தடையை மீறி நடத்தப்பட்ட இந்த ஊர்வலத்தில் சென்றவர்களில் குஞ்ஞப்பி என்கிற புலையர் சாதியைச் சேர்ந்தவர், பாகுலேயன் என்கிற ஈழவர் சாதியைச் சேர்ந்தவர், கோவிந்தப் பணிக்கர் என்கிற நாயர் சாதியைச் சேர்ந்தவர் என மூன்று நபர்கள் காவல்துறையினர் நின்று கொண்டிருந்த இடம் வரை சென்றனர். இந்த மூன்று நபர்களையும் காவல்துறையினர் கைது செய்து 6 மாத காலம் சாதாரணத் தண்டனைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்தனர். இதுதான் வைக்கம் போராட்டத்தின் முதல் போராட்டமாகும்.

கைதானவர்களுக்கு ஆதரவினைத் திரட்டி மேலும் பல போராட்டங்கள் நடைபெற்றன. இந்தப் போராட்டத்திற்கு டி. கே. மாதவன், மகாத்மா காந்தியை நேரில் சந்தித்து வைக்கம் ஊரின் நிலையை எடுத்துக் கூறி ஒப்புதல் கடிதம் பெற்று ஆதரவு திரட்டினார். அதன் பிறகு டி. கே. மாதவன், கே. பி. கேசவமேனோன் ஆகியோர் இந்தப் போராட்டத்தில் முன் வந்து காவல்துறையினரின் தடுப்புச் சுவரை மீறிச் சென்றனர். இந்தக் குற்றத்திற்காக இருவரையும் காவல்துறை கைது செய்ததுடன் 6 மாத காலம் கடுங்காவல் தண்டனையும், ஐநூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டன.





வைக்கம் போராட்டத்தில் ஈ.வெ.ரா. பெரியார்

கைது செய்யப்பட்ட டி. கே. மாதவன் ஈழவர் சாதியைச் சேர்ந்தவர் என்பதால் கேரள மாநிலத்திலிருந்த ஈழவர் சாதியைச் சேர்ந்த பலரும் போராட்டத்தில் இறங்கினர். இந்தப் போராட்டத்தில் இறங்கியவர்களுள் முக்கியமானவர் சகோதரர் அய்யப்பன். நியாயமான இப்போராட்டத்திற்கு ஸ்ரீ நாராயண குரு ஆதரவளித்தார். ஸ்ரீ நாராயண குரு தனக்குச் சொந்தமான பேளூர் மடத்தைப் போராட்டக்காரர்கள் தங்குவதற்காக அளித்தார். இந்தப் போராட்டத்திற்கு நன்கொடையாக ஆயிரம் ரூபாயும் அளித்தார். இந்த மடத்தில்தான் மக்கள் ஒன்று கூடி போராட்டத்திற்குச் சென்றனர். டி. கே. மாதவன் கைது செய்யப்பட்டதும், நியாயமான இப்போராட்டத்திற்கு அனைத்து மக்களும் ஆதரவளிக்க வேண்டும் என ஸ்ரீ நாராயண குரு தன் கைப்பட ஒரு கடிதமெழுதி அதை மக்களிடையே பரப்பிடச் செய்தார். ஸ்ரீ நாராயண குரு செய்தி கேரளா முழுவதும் சென்றது. கேரளா முழுவதும் போராட்டம் நடைபெற்றது.

இப்போராட்டத்திற்காக, ஸ்ரீ நாராயண குருவின் சன்னியாசி சீடர்கள் அனைவரும் வீடுவீடாகச் சென்று உண்டியல் ஏந்திப் பணம் சேகரித்துப் போராட்டக்காரர்களுக்கு அனுப்பினர். அத்துடன் ஒவ்வொரு வீட்டினரும் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு வீட்டிலும் சமைக்கும் முன்பு பெண்கள் ஒரு கைப்பிடி அளவு அரிசியைத் தனியாக எடுத்து வைத்து விடுவார்கள். இப்படி சேகரிக்கப்படும் அரிசி போராட்டக்காரர்களின் உணவுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த அறவழிப் போராட்டம் தொடர்ந்து நடந்தது. முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதும் சமாதானம் ஏற்பட வாய்ப்பு கிட்டுமா என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பணம் படைத்தவர்கள் காவல்துறையினர் உதவியுடன் சில வன்முறையாளர்களைக் கொண்டு போராட்டக்காரர்களை அடித்துத் துன்புறுத்தினர். இருப்பினும் போராட்டக்காரர்கள் தொடர்ந்து அறவழியிலேயே போராடிக் கொண்டிருந்தனர். படிப்படியாகத் தலைவரக்ள் கைது செய்யப்பட்டவுடன் போராட்டம் தொய்வடையும் நிலையில் ,ஈ.வெ.ரா. பெரியாருக்கு ஜோர்ஜ் ஜோசப், கேசவமேனன் ஆகிய இருவரும் இணைந்து ஒரு கடிதம் எழுதினர். நீங்கள் இங்கு வந்துதான் இந்தப் போராட்டத்திற்கு உயிர் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்புக் கேட்பதைத் தவிர வேறு வழியில்லை. அவ்வாறு செய்தால் ஒரு பெரிய காரியம் கெட்டுவிடுமே என்று கவலைப்படுகிறோம் என்று அதில் குறிப்பிட்டிருந்தனர். இந்தக் கடிதத்தின் அடிப்படையில் பெரியார் வைக்கம் விரைந்தார். களத்தில் இறங்கி சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கினார். பெரியார் சூறாவளி போல் சுற்றி வந்து சூடு பறக்கும் சொற்களால் மக்களைத் தீண்டாமைக் கொடுமைக்கெதிராகத் தட்டியெழுப்பினார். இப்போராட்டச் செய்திகள் அனைத்துப் பத்திரிகைகளிலும் முக்கியச் செய்தியாக வெளியாகின. எனவே இந்தப் போராட்டம் குறித்த செய்தி இந்தியா முழுவதும் பரவியது. இதன் பிறகு காங்கிரஸ் இயக்கத் தலைவர்கள் கேரள மாநிலத்திற்குச் செல்லத் தொடங்கினர். இராஜகோபாலாச்சாரி(ராஜாஜி), டாக்டர் வரதராஜுலு நாயுடு, அய்யாமுத்துக் கவுண்டர், சுவாமி சர்தானந்தி, எம். பெருமாள் நாயுடு ஆகியோர் கேரளாவிற்குச் சென்றனர்.

கேரள மாநிலத்திற்குச் சென்ற காங்கிரஸ் பேரியக்கத் தலைவர்களில் ஈ.வே.ரா பெரியாரின் பேச்சு கேரள மக்களை அதிகமாகக் கவர்ந்தது. இதனால் அங்கிருந்த காவல்துறையினரால் ஈ.வே.ரா பெரியார் 1924 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 அன்று கைது செய்யப்பட்டார். அப்போதைய அரசர் உத்தரவின்படி ஒரு மாத கால சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது. இதன்படி அவர் அருவிக்குத்தி சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார் சிறையிலடைக்கப்பட்ட பின்னர் பெரியாரின் மனைவி நாகம்மாள், சகோதரி கண்ணம்மாள் ஆகியோர் வைக்கம் விரைந்து சென்று சத்தியாக்கிரகத்தில் குதித்தனர்.


தண்டனைக்காலம் முடிவடைந்த பின்பு ஈ.வே.ரா பெரியார் விடுதலையானார். விடுதலையான ஒரு வாரத்தில் மறுபடியும் கைது செய்யப்பட்டார். அதன் பிறகு ஆறு மாத காலம் தண்டனை அளிக்கப்பட்டு திருவாங்கூர் மத்தியச் சிறையில் கடினக் காவல் கைதியாகவும் வைக்கப்பட்டார். இந்த தண்டனைக் காலத்தில் நான்கு மாத காலத்தில் அரசர் இறந்து போனார். இதனால் அரச விளம்பரத்தின் அடிப்படையில் ஈ.வே.ரா பெரியார் விடுவிக்கப்பட்டார். விடுதலையான ஈ.வே.ரா பெரியார் பின்னர் அங்கிருந்து ஈரோட்டிற்குத் திரும்பி விட்டார்.

காங்கிரஸ் பேரியக்கத்தின் இந்தியத் தலைவர்கள் பலர் கலந்து கொண்டும் பிரச்சினை முடிவடையாததால் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. காங்கிரஸ் பேரியக்கத்திற்கு இந்த அறவழிப் போராட்டம் ஒரு சவாலான போராட்டமாகவே நடந்து கொண்டிருந்தது. இந்தப் போராட்டம் ஓராண்டுக்கும் மேலாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதனால் மகாத்மா காந்தி 1925 ஆம் ஆண்டு மார்ச் 9 அன்று வைக்கம் போராட்டத்திற்குச் சென்றார்.

அதன் பின்னரும் இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. பல்வேறு தலைவர்களின் போராட்டங்களுக்கும், பேச்சுகளுக்கும் பின்னால் 1925 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் போராட்டம் முடிவுக்கு வந்தது. அகிம்சை எனும் அறவழியில் போராடி வெற்றி கண்ட போராட்டம் இதுதான்.

ஸ்ரீ நாராயணகுருவின், ஸ்ரீ நாராயணகுரு தர்மபரிபாலன சபையின் அமைப்புச்செயலாளரும், காங்கிரஸ் பேரியக்கத்தின் கேரள மாநிலத் தலைவர்களில் ஒருவருமான டி. கே. மாதவன் தலைமையில் நடைபெற்ற வைக்கம் போராட்டத்தில் பெருந்தலைவர்கள் பலர் பங்கு பெற்றுள்ளனர். அவர்களில் மகாத்மா காந்தி, தந்தை பெரியார், இராஜகோபாலாச்சாரி, வினோபாஜி ஆகியோர் முக்கியமானவர்கள்.

போராட்டத்தில் பெரியாரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இந்தப் போராட்டத்தில் அவரது முழுமையான பங்களிப்பு, காந்தியின் பங்கேற்பு, போராட்டத்தின் தாக்கம் ஆகியவை குறித்து பத்தாண்டுகளுக்கு மேல் ஆய்வுசெய்து விரிவான ஆய்வு நூல் ஒன்றை எழுயிருக்கிறார் பழ. அதியமான். இந்தப் புத்தகம் குறித்தும், வைக்கம் போராட்டம் குறித்தும் பி.பி.ஸி தமிழிடம் விரிவாகப் பேசினார் பழ. அதிய மான். பிபிசியின் செய்தியாளர் முரளிதரன் காசி விஸ்வநாதனிடம் அவர் பேசியதிலிருந்து:-


வைக்கம் போராட்டத்தில் காந்தி

கே: வைக்கம் போராட்டம் குறித்து ஆய்வுசெய்து எழுத வேண்டுமென ஏன் முடிவுசெய்தீர்கள்?

ப: தமிழகத்தின் சமூக வரலாறு இன்னும் முழுமையாக எழுதப்படவில்லை. ஆங்காங்கே செய்திகளாக எழுதப்படுகின்றன. அவ்வளவுதான். அந்த வகையில்தான் சேரன் மாதேவி குருகுலப் போராட்டம் குறித்து 2014 இல் ஒரு புத்தகத்தை எழுதினேன். அந்தப் புத்தகம் குறித்து எழுதும்போதுதான் வைக்கம் போராட்டம் குறித்து முழுமையான நூல் ஏதும் இல்லை என உணர்ந்தேன். சுருக்கமாக சில நூல்கள் வந்திருக்கின்றன. அவ்வளவுதான். அந்தப் போராட்டத்தின் முழு வரலாற்றைச் சொல்லும் புத்தகங்கள் வரவில்லை.

ஆகவே, வைக்கம் போராட்டத்தின் வரலாற்றை சமகால நாளிதழ்கள், திருவிதாங்கூர் அரசின் ஆவணங்கள் உள்ளிட்டவற்றை வைத்து இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறேன். தவிர, வைக்கம் போராட்டம் குறித்து வந்த மலையாள இதழ்கள் எனக்கு இரண்டாம் நிலை ஆதாரமாகப் பயன்பட்டன. குறிப்பாக சுதேசமித்திரன் நாளிதழில் வந்த செய்திகள் பெரிதும் பயன்பட்டன. அந்த நாளிதழ் காங்கிரஸ் சார்பு நாளிதழ். அதில் 1924 - 25 இல் வெளியான சுதேசமித்திரனின் ஒவ்வொரு நாளையும் பார்த்து, அதில் வைக்கம் பற்றி வந்த தகவல்களின் அடிப்படையில் இந்த புத்தகத்தை எழுதியிருக்கிறேன்.

மிகுதி நாளை

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை – ஊடக விரிவுரையாளர்.

## கோயம்புத்தூர் பாரதியார் பல்கலையின் அங்கீகரிக்கப்பட்ட நிலையமான

# பிஷப் சவுந்தரம் மீடியா சென்ரர் பட்டமளிப்பு விழா









இந்தியா கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிலையமான பிப் சவுந்தரம் மீடியா சென்ரர் பட்டமளிப்பு விழா கடந்த 25 ஜனவரி 2020 அன்று மாலை 3 மணிக்கு கத்தோலிக்க அச்சக பாதுகாவலன் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த விழாவின் பிரதம விருந்தினாரக யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறை தலைவர் கலாநிதி எஸ்.ரகுராம், யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ஏ.சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழக முன்னாள் ஊடக விரிவுரையாளார் கிருத்திகா தர்மராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் தலைவராக பிப் சவுந்தரம் மீடியா சென்ரர் ஆலோசகர் ஏ ஜீவா போல் அ.ம.தி அடிகளாரும், நிகழ்ச்சி அறிவிப்பாளாராக கிறிஸ்து ராசா ஜெகனும் அனைத்து நிகழ்வுகளுக்குமான ஒழுங்கு ஏற்பாட்டாளராக யாழ் பல்கலைக்கழக முன்னாள் ஊடக வருகை விரிவுரையாளார், இலங்கை திறந்த பல்கலைக்கழக ஊடகவருகை விரிவுரையாளார் மற்றும் இந்தியா, கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் இணைப்பாளருமான அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரும் செயலாற்றினர். மேற்படி நிகழ்வில் 35 இளங்கலை மாணி மற்றும் முது கலை மாணி பட்டதாரிகள் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

## விவிலியம் வழங்கும் நிகழ்வு

ஆண்டின் பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறு சிறப்பிக்கப்படும் முதல் இறைவார்த்தை ஞாயிறு பற்றி புதிய வழி நற்செய்தி அறிவிப்பு திருப்பீட அவைத் தலைவர் பேராயர் ரீனோ பிசிக்கெல்லா அவர்கள் செய்தியாளர் கூட்டத்தில் விவரித்தார்,

இறைவார்த்தை ஞாயிறு உருவாக்கப்பட்டது மற்றும் அந்த ஞாயிறு சிறப்பிக்கப்படும் முறைமை குறித்து விளக்கிய பேராயர் பிசிக்கெல்லா உலகெங்கும் வாழ்கின்ற கத்தோலிக்கர் அனைவரும் கடவுள் மீதும் அவரது வார்த்தை மீதும் ஆழ்ந்த அன்பும் மதிப்பும் கொண்டு அதற்கு பிரமாணிக்கத்துடன் சான்று பகருமாறு திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார் என்று கூறினார். இத்திருப்பலியில் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்க அமர்வுகள் அனைத்திலும் பயன்படுத்தப்பட்ட திருப்பலி வாசக நூல் மிகவும் ஆடம்பரமாக அரங்கேற்றம் செய்யப்படும் என்றும், திருப்பலியின் இறுதியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அன்றாட வாழ்வின் பல்வேறு நிலைகளைக் குறிக்கும் முறையில் நாற்பது பேருக்கு விவிலியத்தை வழங்குவார் என்றும் பேராயர் பிசிக்கெல்லா அவர்கள் கூறினார்.

## மெய்வன்மையில் இரண்டு பிரிவுகளில் பற்றிக்ஸ் கல்லூரிக்கு தங்கப் பதக்கம்

இலங்கை கல்வி அமைச்சு அகில இலங்கை ரீதியில் நடாத்திய ஆரம்ப பிரிவு மாணர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் (மெய்வன்மை)போட்டியின் இறுதி நிகழ்வில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி தரம் 04 மற்றும் தரம் 05 ஆண் மாணவர்களுக்கான போட்டியில் தேசிய ரீதியில் இரு பிரிவுகளிலும் தங்க பதக்கத்தை தட்டிச் சென்றது.

இப் போட்டி கண்டி நாவலப்பிட்டி ஜெயதிலக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் இறுதிப்போட்டியில் 72 பாடசாலைகள் அகில இலங்கை ரீதியில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருத்தந்தையின் தென் கொரியத் திருத்தூதினால் அங்கு கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை உயர்வு

தென் கொரியாவில் கடந்த இருபது ஆண்டுகளில் கத்தோலிக்கரின் எண்ணிக்கை ஏறத்தாழ ஐம்பது விழுக்காடு அதிகரித்துள்ளது என கொரிய நாளிதழ் கூறியுள்ளது. தென் கொரிய கத்தோலிக்க மேய்ப்புப்பணி மையம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையின்படி 1999ஆம் ஆண்டில் 39 இலட்சத்து 46 ஆயிரத்து 844 கத்தோலிக்கர் இருந்தனர். இவ்வெண்ணிக்கை 2018ஆம் ஆண்டில் 58 இலட்சத்து 66 ஆயிரத்து 510 ஆக, 48.6 விழுக்காடு அதிகரித்துள்ளது.

இவ்வெண்ணிக்கை 2009ம் ஆண்டில் 2 விழுக்காடாகவும் 2010ஆம் ஆண்டில் மேலும் 1.7 விழுக்காடாகவும் 2014ஆம் ஆண்டில் மேலும் 2.2 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது என்றும் இதற்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தென் கொரியத் திருத்தூதுப் பயணமே முக்கிய காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2014ஆம் ஆண்டில், ஆறாவது ஆசிய இளைஞர் நாளுக்கென தென் கொரியாவுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அருள்பணித்துவத்தின் எட்டுப் பேறுகள்

அருள்பணித்துவத்தின் எட்டுப் பேறு கள் பற்றி இந்திய இலத்தீன் வழிபாட்டு முறை மறைமாவட்டங்களின் ஏறத்தாழ எழுநூறு அருள்பணியாளர்களுக்கு எடுத்துரைத்தார் இந்திய ஆயர் பேரவைத் தலைவரும் மும்பை பேராயருமான கர்தினால் ஒஸ்வோல்ட் கிரேசியஸ்.

இந்திய மறைமாவட்ட அருள்பணியாளர்கள் அவை தமிழகத்தின் அன்னை வேளாங்கண்ணி திருத்தலத்தில் 28 ஜ்னவரி 2020 அன்று தொடக்கிய நான்கு நாள் மாநாட்டில் ஆரம்ப உரையாற்றிய கர்தினால் கிரேசியஸ் அவர்கள் மகிழ்வாக இருக்கும் அருள்பணியாளர்களின் பண்புகள் பற்றி விளக்கினார்.

'அருள்பணித்துவத்தின் மகிழ்வு' என்ற தலைப்பில் நடைபெற்ற இம்மாநாட்டில் உரையாற்றிய கர்தினால் கிரேசியஸ் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் ஏற்கனவே சொல்லப்பட்ட அருள்பணியாளர்களின் எட்டுப் பேறுகள் பற்றி விவரித்தார்.

இயேசுவோடு ஆழமான ஆள் - ஆள் உறவு கொண்டிருப்பவர் - ஆடுகளின் மணத்தைக் கொண்டிருப்பவர் - எளிய வாழ்வு வாழ்பவர் - சமுதாயத்தின் விளிம்புகளுக்குச் செல்பவர் - இரக்கமுள்ள இதயத்தைக் கொண்டிருப்பவர் - இறைவார்த்தையால் ஊட்டம்பெற்று - மற்றவரையும் அதனால் ஊட்டம் பெறச்செய்பவர்- எதிலும் தன்னை முன்னிலைப்படுத்தும் எண்ணத்தைத் தவிர்த்திருப்பவர -ஆண்டவரில் நம்பிக்கை வைப்பவர் ஆகியோரே மகிழ்வான அருள்பணியாளர்கள் என்று, கர்தினால் கிரேசியஸ் அவர்கள் கூறினார்.

# காணாமல் ஆக்கப்பட்டோர் கொல்லப்பட்டு விட்டனர்! அதற்காகப் போராடவல்ல தமிழ்த் தலைவர்கள் யார்?

எம்.திருநாவுக்கரசு



இனியும் தமிழ் தலைவர்கள் தூங்கி இருக்க முடியாதவாறு எதிரி தமிழ்த் தலைவர்களைத் தட்டி எழுப்பி உள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கோரும் போராட்டங்களை அவர்களின் உறவினர்களே இதுவரைநடத்தி வந்தனர். அரசியல் தலைவர்கள் பெருமளவுக்கு இதில் பங்கு எடுக்காது காணப்பட்டனர்.

தலைமை தாங்க வேண்டிய அரசியல் தலைவர்கள் வசதியாக அரசாங்கத்தோடு கைகோர்த்துச் செயல்பட்டு வந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடுவதற்கான ஒரு செயலகத்தைத் திறந்துவிட்டதாகக் கூறி நல்லாட்சி அரசாங்கத்தினரும் அவர்களது கூட்டாளிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கண்ணாம்பூச்சி ஆடினர்.

ஆனால் இப்போதும் காணாமல் ஆக்கப்பட்ட 20,000க்கும் மேற்பட்ட அனைவரும் இறந்துவிட்டனர் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இது பற்றி பிபிசி தமிழோசை இணையதளம் பின்வருமாறு செய்தியை பதிவு செய்துள்ளது:

இலங்கை உள்நாட்டுப் போரில் காணாமல் போன 20,000 பேர் இறந்துவிட்டனர்' – கோட்டாபய ராஜபக்ஷ

கடந்த பல ஆண்டுகளாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான போராட்டங்களும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

இலங்கை உள்நாட்டுப் போரின்போது காணாமல் போன 20,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர் என அந்த நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

உள்நாட்டுப் போர் நடந்த சமயத்தில் காணாமல் போனவர்கள் இறந்துவிட்டனர் என இலங்கை அரசு ஒப்புக்கொண்டது இதுவே முதல் முறை.

கொழும்பில் ஐ.நாவின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கர் உடனான சந்திப்பின்போது கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகள் பாதுகாப்பு படைகளின் வசம் உள்ளனர் என அவர்களது உறவினர்கள் நம்புகின்றனர். ஆனால், அதை இலங்கை அரசு தொடர்ந்து மறுத்து வந்தது.

காணாமல் போனவர்கள் விவகாரத்தை தீர்ப்பதற்கான தமது திட்டங்கள் குறித்து ஜனாதி



பதி ராஜபக்ஷ விவரித்தார். அவர்கள் இறந்துவிட்டனர் என்பதையும் விவரித்தார், என பிபிசி தமிழோசை இணையத் தளத்தில் செய்தி பதிவாகியுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி மிகத்தெளிவாக, வெளிப்படையாக இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதியிடம் கூறிய பின்பும் தமிழ் தலைவர்கள் இன்னும் தூக்கம் கலையாது இருக்கிறார்கள்.

யுத்தத்தின்போது போரில் கொல்லப்பட்டோர் என்பது வேறு, சரணடைந்தவர்களும் கைது செய்யப்பட்டவர்களும் கொல்லப்பட்டு விட்டனர் என்பது வேறு.

இவ்வாறு இந்த உயிருடன் கைது செய்யப்பட்ட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும் உயிரிழுந்த இந்தக் கொடூரமான இனப்படுகொலையை எந்த வழியிலும் ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது.

முன்னறிவித்தலுடன் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் எஸ். நடேசன் தலைமையில் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனர் என்ற அபகீர்த்திமிக்க படுகொலை ஒருபுறமிருக்க, சரணடைந்தும், கைது செய்யப்பட்டும் இருந்த 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இதுவரை காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு வந்தனர்.

ஆனால் தற்போது அவர்கள் அனைவருமே கொல்லப்பட்டு விட்டனர் என்ற படுகொலைச் செய்தியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலில் பல சிறுவர்களும் உள்ளடங்குவர்.

விடுதலைப்புலிகளின் கல்வி பொறுப்பாளராக இருந்த திரு பேபி சுப்பிரமணியமும் மனைவியும் சரணடைந்த போது கூடவே அவர்களது 8 வயது சிறுமியும் சரணடைந்தாள்.

அவ்வாறே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விளையாட்டுத் துறை உதவி பொறுப்பாளர் திரு.ராஜா சரணடைந்த போதும் அவருடன் கூடவே 10 வயதுக்குட்பட்ட அவரது மூன்று சிறுவர்களும் சரணடைந்தனர்.

இவ்வாறு சரண் அடைந்திருக்கக்கூடிய ஏனைய சிறுவர்களும் மேற்படி அரசின் படுகொலைபட்டியலுக்கு உள்ளாக்கப்பட்டனர். இதனைச் சிறுவர் படுகொலை பட்டியல் என அழைக்க வேண்டும்.

இந்நிலையில் களத்தில் இருக்கும் தமிழ் தலைவர்கள் முதலில் பாரிய நேரடிப் போராட்டங்களை உடனடியாக முன்னெடுக்க வேண்டிய பொறுப்பில் உள்ளனர். ஆதலால் சிறிதும் தாமதிக்காது தலைவர்கள் தாங்களே நேரடியாகப் போர்க்களம் இறங்க வேண்டும்.

அரசாங்கத்துடன் இணைந்து முண்டு கொடுத்துக் கொண்டிருந்தவர்களுக்கு இதற்கான பொறுப்பு மிக மிக அதிகம். இனியும் எந்தவிதமான ஒரு சாக்குப் போக்கும் சொல்ல முடியாது.

காணாமல் ஆக்கப்பட்டோர் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதை முதலில் சொல்ல வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் இறந்துவிட்டனர் என்று கூறுபவருக்கு அதனை

விவரிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இருக்கின்றன. இதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று தமிழ்த் தலைவர்கள் முதலில் போர்க்களம் புகவேண்டும்.

துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டனரா, அடித்துக் கொல்லப்பட்டனரா, வெட்டிக் கொல்லப்பட்டனரா, நச்சு வாயுக்களால் கொல்லப்பட்டனரா, அல்லது உகண்டாவில் இடிஅமீன் செய்தமை போல தலையில் இரும்புச் சுத்தியல்களால் தலையில் அடித்துக் கொல்லப்பட்டனரா என்ற விவரங்களை இவர்கள் சொல்லியாக வேண்டும்.

அடுத்து கொல்லப்பட்ட இடங்கள் எவை, அவ்வாறு கொன்ற கொலையாளிகள் யார், அத்தகையபடுகொலைகளுக்கு கட்டளையிட்டவர்கள் யார், மொத்தத்தில் இப்படுகொலைகள் அனைத்திற்கும் பொறுப்பாளிகள் யார் என்ற கேள்விகள் அனைத்தும் முக்கியமானவை.

இவ்வாறு கொல்லப்பட்டோரின் உடல்கள் புதைக்கப்பட்டனவா , எரிக்கப்பட்டனவா அல்லது மிருகங்களுக்கு உணவாக்கப்பட்டனவா என்ற கேள்விகளும் கூடவே முக்கியமானவை.

இவை அனைத்தையும் முன்னிறுத்தி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மற்றும் சர்வதேச

அரங்கங்களிலும் தமிழ்த் தலைவர்கள் போராட வேண்டும். இவ்வகைப் போராட்டத்தில் ஈடுபடக் கூடிய தலைவர்களையே தமிழினம் தற்போது எதிர்பார்க்கிறது.

நாடாளுமன்ற நாற்காலிகளுக்காகவும்



பதவிகள் மற்றும் வசதிகளுக்காகவும் பாடுபடும்

சுயநலங்கொண்ட தலைவர்களை விடுத்து போராடவல்ல தலைவர்கள் எழவேண்டிய காலம் இது. ஒரே நேரத்தில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உண்ணாவிரதம் மற்றும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை தமிழ்த் தரப்பு முன்னின்று நடத்த வேண்டும்.

மேலும் பல்வகையான புதிய புதிய போராட்ட முறைகளை அடையாளங்கண்டு அவற்றையெல்லாம் முன்னெடுத்துக் காணாமல் ஆக்கப்பட்டோர் படுகொலையை அனைத்து வழிகளிலும் அம்பலப்படுத்தி தமிழ் மக்களின் விடுதலைக்கு இதனை ஒரு ஊன்றுகோலாக்கச் வேண்டும்.

எதிரிக்கு உள்ள நெருக்கடிகளின் பின்னணியில் தற்போது எதிரி தனக்கு எதிராக போராடுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பைத் தந்துள்ளார்.

அண்மையில் நடக்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் அவையின் மாநாட்டை ஒட்டி இவ் விவகாரம் அதிகம் சூடுபிடித்துள்ளது. ஆதலால் இந்த வாய்ப்பைச் சரிவர முன்னெடுக்கவேண்டும்.

உள்நாட்டில் உள்ள பல்வேறு தமிழ் அமைப்புகளும் தமிழ் தலைவர்களும் தங்களுக்கு இடையேயான அனைத்து வகைப் பேதங்களையும் மறந்து ஒற்றைக் குறிக்கோளுடன் ஒன்றுபட்டு போராட வேண்டும்.

அவ்வாறே வெளிநாட்டிலுள்ள பல்வேறு தமிழ் அமைப்புகளும் அந்தந்த நாடுகளின் தலைநகரங்களில் ஒன்றுபட்டு நின்று போராட வேண்டும். ஜனநாயக வழியில் போராட சர்வதேச அரங்கில் நிச்சயமாக இடமுண்டு.

உள்நாட்டிலும் தற்போது காணப்படும் தேர்தற் சூழற் பின்னணியில் போராடுவதற்கான களம் இலகுவாக உண்டு. எப்படியோ ஜனநாயக வழிகளில் போராடும் போது இலங்கை அரசால் அதனை கண்டபடி தடுக்க முடியாது.

நன்றி:தமிழ்வின் இணைம்

## ஐரோப்பிய அணியில் இந்திய வீராங்கனை!

ஐரோப்பிய உதைபந்து அணியில், இந்திய வீராங்கனை பால தேவி ஒப்பந்தம் செய்துள்ளார்.

ஐரோப்பியாவின் முன்னணி உதைபந்து கிளப்புகளில் ஒன்றான ஸ்காட்லாந்தின் ரேஸ்சர்ஸ் எப்.சி. அணியில் பால தேவி ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்.

இவர், பார்வர்ட்டில் சிறப்பாக ஆடி வருகிறார். இந்திய அணியின் பல வெற்றிக்கு காரணமான இவர், 18 மாத ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்.

இந்தியாவின் மணிப்பூரை சேர்ந்த பாலதேவி, இந்திய அணியில் 58ஆட்டங்களில் 52கோல் அடித்தவராவார்.

இது குறித்து அவர் பேசுகையில், 15வயதில் இருந்து இந்திய தேசிய அணியில் ஆடி வருகிறேன். ஐரோப்பிய லீக்கில் ஆட வேண்டும் என்பது எனது கனவு. அது தற்போது நனவாகி உள்ளது.

ரேஞ்சர்ஸ் அணியில் விளையாடுவது பெருமையாக கருதுகின்றேன். அந்த அணியில் பெற்ற ஒரு வார பயிற்சி தெற்காசிய போட்டில் சிறப்பாக ஆட உதவியது.

இந்த வாய்ப்பு இந்திய கால் பந்து வீராங்கனைகளுக்கு ஊக்கமாக அமையும். பிஃபா 17வயது மகளிர் உலகக் கோப்பையில் ஆடவுள்ள வீராங்களைகள் கடினமாகவும் நாட்டுக்காவும் சிறப்பாக ஆட வேண்டும் என்றார்.



## இறுதிப் போட்டிக்குள் சிட்னி சிக்ஸர்ஸ் அணி!



பிக் பேஷ் ரி – 20 தொடரின் இறுதிப் போட்டிக்கான தகுதி போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணி 43 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் சிட்னி சிக்ஸர்ஸ் அணி, முதல் அணியாக மகுடத்திற்கான இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

மெல்போர்ன் மைதானத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணியும், மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய சிட்னி சிக்ஸர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 142 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோஷ் பிலீப்பே 34 ஓட்டங்களையும், ஜோர்தான் சிலிக் 25 ஓட்டங்களையும், ஸ்டீவ் ஸ்மித் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணியின் பந்துவீச்சில், ஆடம் ஸம்பா 3 விக்கெட்டுகளையும், கிளென் மேக்ஸ்வெல், ஹரிஸ் ரவூப், நாதன் குல்டர் நெய்ல் மற்றும் மார்கஸ் ஸ்டொயினிஸ் ஆகியோர் தலா 1 விக்கெடையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 143 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணி, 18 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 99 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் சிட்னி சிக்ஸர்ஸ் அணி 43 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கிளின்ட் ஹின்ச்லைப் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும், கிளென் மேக்ஸ்வெல் மற்றும் நிக் மேடின்ஸன் ஆகியோர் தலா 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் பந்துவீச்சில், சீன் அபபோட் 3 விக்கெட்டுகளையும், ஸ்டீவ் ஓகீப் மற்றும் ஜோஷ் ஹசில்வுட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், நாதன் லியோன் மற்றும் பென் டுவார்ஷுயுஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் ஸ்டீவ் ஓகீப் தெரிவு செய்யப்பட்டார்.

## தொடரை வென்றது இலங்கை அணி!

சிம்பாப்வே அணிக்கெதிரான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

இந்தப் போட்டி சமநிலைப் பெற்றதன் மூலம், முதல் போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை அணி தொடரை 1– 0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஹராரே மைதானத்தில் கடந்த 27ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய சிம்பாப்வே அணி, முதல் இன்னிங்ஸிற்காக 406 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

சிம்பாப்வே அணி சார்பில், சீன் வில்லியம்ஸ் 107 ஓட்டங்களையும், சிக்காண்டர் ராஸா 72 ஓட்டங்களையும். பிரெண்டன் டெய்லர் 62 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், லசித் எம்புல்தெனிய 4 விக்கெட்டுகளையும், தனஞ்சய டி சில்வா 3 விக்கெட்டுகளையும், சுரங்கலக்மால் 2 விக்கெட்டுகளையும், லஹிரு குமாரா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய இலங்கை அணி, 293 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இலங்கை அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அஞ்சலோ மெத்தியூஸ் 64 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன மற்றும் ஒசேத



பெனார்டோ ஆகியோர் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சிம்பாப்வே அணியின் பந்துவீச்சில், சிக்காண்டர் ராஸா 7 விக்கெட்டுகளையும், கார்ல் மும்பா, டொனால்ட் ரிபனோ மற்றும் விக்டர் நியாச்சி ஆகியோர் தலா 1விக்கெட்டையும் வீழ்த்தினர்.

113 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய சிம்பாப்வே அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 247 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, தனது இரண்டாவது இன்னிங்சை இடைநிறுத்திக் கொண்டது. இதனையடுத்து 361 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பிரெண்டன் டெய்லர் 67 ஓட்டங்களையும், சீன் வில்லியம்ஸ் ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், விஷ்வ பெனார்டோ மற்றும் லசித் எம்புல்தெனிய ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், சுரங்க லக்மால் மற்றும் லஹிரு குமாரா ஆகியோர் தலா 1விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 361 ஓட்டங்கள் வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, போட்டியின் இறுதிநாள் ஆட்டநேர முடிவு வரை 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 204 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது இலங்கை அணி சார்பில், அதிகபட்ச ஓட்டங்களாக குசல் மெண்டிஸ் ஆட்டமிழக்காது 116 ஓட்டங்களையும், ஒசேத பெனார்டோ 47 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சிம்பாப்வே அணியின் பந்துவீச்சில், சிக்காண்டர் ராஸா, கார்ல் மும்பா மற்றும் விக்டர் நியாச்சி ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக சிக்காண் டர் ராஸா தெரிவு செய்யப்பட்டமையோடு, தொடரின் நாயகனாக அஞ்சலோ மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டார்.

## சுப்பர் ஓவரில் நியூஸிலாந்தை மீண்டும் வீழ்த்தியது இந்தியா!

நியூஸிலாந்து அணிக்கெதிரான நான்காவது பரபரப்பான ரி – 20 போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி சுப்பர் ஓவரில் வெற்றி பெற்றுள்ளது.



இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ரி –20 தொடரில் 4 – 0 என்ற கணக்கில் இந்தியக் கிரிக்கெட் அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

வெலிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய இந்தியா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 165 ஓட்டங்களை பெற்றது.

இதில் இந்தியா அணி சார்பில், லோகேஷ் ராகுல் 39 ஓட்டங்களையும், சஞ்சு சாம்சன் 8 ஓட்டங்களையும், விராட் கோஹ்லி 11 ஓட்டங்களையும், ஸ்ரேயஸ் ஐயர் 1 ஓட்டத்தினையும், சிவம் டுபே 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

வொஷிங்டன் சுந்தர் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், சர்துல் தாகூர் 20 ஓட்டங்களையும், யுஸ்வேந்திர சஹால் 1 ஓட்டத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

மேலும், மனீஷ் பாண்டே 50 ஓட்டங்களையும், நவ்தீப் சைனீ 11 ஓட்டங்களுடனும் இறுதி வரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில், இஷ் சோதி 3 விக்கெட்டுகளையும், ஹமீஸ் பென்னட் 2 விக்கெட்டுகளையும், ஸ்கொட் குகலீஜன், டிம் சவுத்தீ மற்றும் மிட்செல் சான்ட்னர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 166 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 165 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதனால் போட்டி சமநிலைப் பெற்றது.

இதன்போது நியூஸிலாந்து அணி சார்பில், மார்டின் கப்டில் 4 ஓட்டங்களையும், கொலின் முன்ரோ 64 ஓட்டங்களையும், பெற்றுக்கொண்டனர்.


டொம் புரூஸ் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், ரோஸ் டெய்லர் 24 ஓட்டங்களுடனும் டிம் செய்பர்ட் 57 ஓட்டங்களுடனும், டேர்ல் மிட்செல் 4 ஓட்டங்களுடனும், மிட்செல் சான்ட்னர் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஸ்கொட் குகலீஜன் ஓட்டமெதும் பெறாத நிலையில் களத்தில் இருந்தனர்.

இந்தியா அணியின் பந்துவீச்சில், சர்துல் தாகூர் 2 விக்கெட்டுகளையும், ஜஸ்பிரிட் பும்ரா மற்றும் யுஸ்வேந்திர சஹால் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

வெற்றி இலக்கு சமநிலைப் பெற்றதால், வெற்றியாளரை தெரிவு செய்யவதற்கு சுப்பர் ஓவர் வழங்கப்பட்டது. பரபரப்பான சுப்பர் ஓவரில் முதலில் களமிறங்கிய நியூஸிலாந்து அணி 13 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

14 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை களமிறங்கிய இந்தியா அணி, ஐந்து பந்துகளில் வெற்றி இலக்கை கடந்து வெற்றியை பதிவு செய்தது.

இரு அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ரி – 20 போட்டி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி மவுண்ட் மவுண்ங்காய் மைதானத்தில் நடைபெறவுள்ளது.



கலாநிதி (திருமதி) சுபாஜினி உதயராசா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தலைவர்
புவியியற்றுறை,
யாழ.பல்கலைக்கழகம்

**இன்று உலக ஈரநில ( wetland Day) அனுஷ்டிக்கப்படுகின்றது. இதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

# இயற்கைச் சமநிலையையும் அதன் மூலம் ஈரநிலங்களையும் பாதுகாத்து பேணுவோம்!

**அறிமுகம்:-** புவிமேற்பரப்பில் பல்வேறுபட்ட இயற்கைச் சூழற் தொகுதிகள் காணப்படுகின்றன. அவற்றினை நாம் நீர்சார் சூழற் தொகுதிகள் எனவும், நிலம் சார் சூழற் தொகுதிகள் எனவும் இரண்டு வகையாக பாகுபடுத்தலாம். நிலம் சார் சூழல் தொகுதி எனும் போது காடுகள், புல்நிலங்கள், வயல்வெளிகள், புந்தோட்டங்கள், பாலைவனங்கள் என்பவற்றைக் கூற லாம். நீர்சார் சூழற்தொகுதி எனும் போது ஆறுகள், குளங்கள், சமுத்திரங் கள், ஏரிகள், கடல்கள்,ஈரநிலங்கள், பொங்குமுகங்கள் என்பன உள்ளடக் கப்படுகின்றன. அந்த வகையில் நீர்ச்சூழல் தொகுதியில் உள்வாங்கப் படும் ஓர் அம்சமாக ஈரநிலங்கள் அமை கின்றன. இத்தொகுதிகள் புவிமேற் பரப்பில் பல்வேறுபட்ட அங்கிகளுக்கு ஆதாரமாக விளங்குவதோடு, இயற் கைச் சமனிலையைப் பேணும் ஒரு களமாகவும் தொழிற்படுகின்றது. இவ் வாறான ஈரநிலங்கள், அதன் பரம்பல், அதன் வகைகள், அவற்றின் முக்கியத்துவம், சூழலில் அவை எதிர் நோக்கும் பிரச்சினைகள், அவற்றிலிருந்து ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகள், இலங்கையில் ஈரநிலங்கள் போன்ற விடயங்களை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## ரம்சார் உடன்படிக்கையும், உலக ஈரநில தினமும்

ரம்சார்என்பதுஈரான் நாட்டின் ஒரு நகரமாகும். 1971ம் ஆண்டு இந்த நகரில் முக்கியமானதொரு சர்வதேச உடன்பாடு எட்டப்பட்டது. அதுதான் ஈரநில உடன்படிக்கை ஆகும். புமியின் மொத்த நிலப்பரப்பில் 6 சதவீதமாக உள்ள ஈரநிலங்களைப் பாதுகாத்துக் கொள்ளவென ஏற்படுத்தப்பட்ட இந்த உடன்படிக்கையே ரம்சார் உடன்படிக்கை என்று பிரபல்யம் பெற்றுள்ளது. 1971இல் செய்து கொள்ளப்பட்ட ரம்சார் உடன்படிக்கையின் படி, அந்த உடன்படிக்கையினை அமுல்படுத்துவதற்குச் சர்வதேசப் பிரஜைகளின் கவனத்தை ஈர்ப்பது அவசியமாகும். அதனையிட்டு, 1997ஆம் ஆண்டு உலக ஈரநிலதினம் பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 2ஆம் திகதியில் உலக ஈரநில தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2020ஆம் ஆண்டு உலக ஈரநில தினத்தின் சர்வதேச ஆய்வுப் பொருள்ஈரநிலங்களும் உயிர்பல்வகைமையும் என்பதாகும் (The international theme for world wetland Day 2020 ளை wetlands and Biodiversity). 1997ஆம் ஆண்டு உலக ஈரநிலதினம் பிரகடனப்படுத்தப்பட்டதில் இருந்து 2021ஆம் ஆண்டு வரையான உலக ஈரநில தினத்தின் சர்வதேச ஆய்வுப் பொருளானது (theme) பின்வரும் அட்டவணை ஒன்றில் அவதானிக்க முடியும்.

| ஆண்டு | தொனிப்பொருள்(theme for world wetland) |
|---|---|
| 1997 | "Benefits of wetlands to the Human Population" |
| 1998 | "Conserving wetlands to ensure availability of clean water for all" |
| 1999 | "People and Wetlands: the Vital Link" |
| 2000 | "Celebrating Our Wetlands of International Importance" |
| 2001 | "Wetland world-A world to discover" |
| 2002 | "Wetlands: Water, Life, and Culture" |
| 2003 | "No wetlands-no water" |
| 2004 | "From Mountains to the Sea-Wetlands at Work for Us" |
| 2005 | "Cultural and biological diversity in wetlands" |
| 2006 | "Wetlands as a tool in poverty alleviation" |
| 2007 | "Fish for tomorrow?" |
| 2008 | "Healthy Wetlands, Healthy People" |
| 2009 | "Upstream-Downstream: Wetlands connect us all" |
| 2010 | "Wetlands, Biodiversity and climate Change" |
| 2011 | "wetlands and forests-forests for water and wetlands" |
| 2012 | "Wetlands and Tourism" |
| 2013 | "Wetlands take care of water" |
| 2014 | "Wetlands and Agriculture" |
| 2015 | "Wetlands for Our Future" |
| 2016 | "Wetlands for Our Future: Sustainable Livelihoods" |
| 2017 | "Wetlands for Disaster Risk Reduction" |
| 2018 | "Wetlands for a Sustanable Urban Future" |
| 2019 | "Wetlands and Climate Change" |
| 2020 | "Wetlands and Biodiversity" |
| 2021 | "Wetlands and Water" |

## ஈரநிலங்கள் என்றால் என்ன?

நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நீரால் மூடப்பட்டிருக்கும் இடங்களை ஈரநிலங்கள் எனக் கூறலாம். ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கான ஒரு சர்வதேச ஒப்பந்தமான ரம்சார் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையின் படி (Ramsar Convention)ஈரநிலம் என்பது பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது. சதுப்பு, தாழ்வு நிலம் அல்லது முற்றாக நிலக்கரி நிலமாயினும், அலையற்ற சமயங்களில் ஆறு மீற்றருக்கு மேற்படாத ஆழங்கொண்ட இயற்கையான அல்லது செயற்கையான, நிலையான அல்லது பாய்கின்ற நன்னீர், உவர்நீர் அல்லது கடல் நீர் உட்பட்ட உப்பு நீர்ப் பகுதிகளை அடக்கும். ஈரநிலங்களாகக் கருதப்பட வேண்டிய பரந்துபட்ட மண்ணியல் தொகுதிகளை உள்ளடக்க கூடிய விதத்தில் வேண்டுமென்றே இவ்வரையறை விரிவான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. எனினும்ஈர நிலங்கள் தொடர்பான வரையறை தாவரங்களோடு கூடிய சதுப்பு நிலங்களை மட்டும் உள்ளடக்க கூடியதாக மிக அடக்கமாக உள்ளது.

## ஈரநிலங்களின் பரம்பல்

ஈரநிலங்களின் பரம்பலானது இடத்திற்கிடம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. அதாவது குறைவாக விருத்தியடைந்த நாடுகளிலேயே இவை அதிகமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக இலங்கை, இந்தியா, வங்காளதேசம் போன்ற நாடுகளில் அதிக ஈரநிலங்கள் பரம்பிக் காணப்படுகின்றன. இவற்றினைத் தவிர ஐக்கிய அமெரிக்கா, கனடா, அலாஸ்கா, ஆபிரிக்கா, தென்மத்திய பிறேசில் போன்ற நாடுகளிலும் ஓரளவிற்குப் பரம்பிக் காணப்படுகின்றன. உலகிலேயே மிகப்பெரிய ஈரநிலங்கள் காணப்படும் இடமாக தென்மத்திய பிறேசில் காணப்படுகின்றது. பங்களாதேசில் காணப்படும் ஈரநிலங்களை சந்தர்பண்ட்ஸ் என சிறப்பாக அழைக்கின்றனர். இலங்கையிலும் பல்வேறு வகையான ஈரநில வகைகள் காணப்படுகின்றன. அதாவது ஆழமற்ற குடாக்களையும், நீரிணைகளையும் கொண்டவை மற்றும் கடனீரேரிகள் கரையோரத்தை அடுத்துக் காணப்படும் தீவுகள், பாறைக் கடற்கரைகள், நீர்த் தேக்கப் பகுதிகள், சதுப்பு நிலங்கள், வெள்ளச் சமவெளிகள், பொங்கு முகங்கள், வில்லுகள் போன்ற வடிவங்களில் ஈர நிலங்கள் பரந்து காணப்படுகின்றன.

**ஈரநில உயிர்ச் சூழல் தொகுதிகள்**

Source:-exploringnature.org



Source:- sites.google.com



Source:- citizensforsanity.com



Source:- academic.emporia.edu.



## ஈரநிலங்களின் வகைகள்

1. ஆழங்குறைந்த குடாக்களும், நீரிணைகளும்
2. பொங்கு முகங்கள்
3. கரையோரங்களுக்கு அப்பால் இருக்கும் சிறிய தீவுகள்.
4. பாறைகள் நிறைந்த கடற்கரைகள்.
5. கடற்கரைகள். (மணற்பாங்கானவை)
6. இடை அலைப்பிரதேச சேற்றுத் தட்டை நிலங்கள்:- இவை அலைகுறைந்த சமயங்களில் வெளயே காணப்படும் பொங்கு முகங்கள், கடலேரிகள் மற்றும் ஆற்று முகங்களோடு தொடர்பானவை.
7. நீர்த் தாழைச் சதுப்பு நிலங்கள்:- இவை பொங்கு முகங்கள், கடலேரிகள் மற்றும் ஆற்று முகங்களை அண்டிக் காணப்படுபவை.
8. கரையோர உவர்நீர்க் கடலேரிகள்.
9. உப்பளங்கள்.
10. இறால் வளர்ப்புக் குளங்கள்.
11. நதிகள், ஆறுகள் (மெதுவாக ஓடுபவை)
12. நதிகள், ஆறுகள் (வேகமாக ஓடுபவை)
13. ஆறுகளை அண்டிய சதுப்பு நிலங்கள்.
14. நன்னீர் வாவிகளும், அவற்றை அண்டியுள்ள சதுப்பு நிலங்களும்.
15. உள்நாட்டு வடிகால் அமைப்புக்கள்.
16. நீர்த்தேங்கங்கள், அணைக்கட்டுக்கள்.
17. காலத்திற்குக் காலம் நீர் பெருக்கெடுக்கும் புற் தரைகள்.
18. நெல் வயல்கள்.
19. வெள்ளப் பெருக்குடன் கூடிய பயிர்ச் செய்கை நிலங்கள்.
20. சதுப்புக் காடுகள்
21. முற்றா நிலக்கரிச் சதுப்புக்கள்.

மேற் கூறப்பட்ட ஈரநிலவகைகளை பொதுவாக இயற்கையான ஈரநிலங்கள், செயற்கையான ஈரநிலங்கள் என இரண்டாக வகைப்படுத்தலாம். இவ்விரண்டையும் நன்னீர் ஈரநிலம், உவர்நீர்ஈரநிலம், சவர்நீர் ஈரநிலம் என்று மேலும் மூன்று பிரிவுகளாக பிரித்தறிய முடியும்.

## ஈரநிலங்களின் முக்கியத்துவம்.

ஈரநிலங்களில் பலதரப்பட்ட உயிரினங்களைக் காண முடியும். பல ஈரநில உயிரினங்களுக்கு இப்பிரதேசங்கள் இருப்பிடமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். அங்கு வசிக்கும் உயிரினங்களுக்கும் வசிக்காத உயிரினங்களுக்கும் தேவையான உணவுகள் ஈரநிலங்களில் காணப்படுகின்றன. மண்ணில் காற்று குறைவடையும் போது அதற்கு ஈடு கொடுக்கும் வகையிலான விசேட ஏற்பாடுகள் இங்குள்ள தாவரங்களில் உண்டு. நன்னீரிலும்,களப்பிலும் வசிக்கும் நத்தைகள், வண்ணத்துப்புச்சிகள், இறால்கள், சிங்கி இறால்கள், மீன் இனங்கள், பட்சிகள், பாலூட்டிகள்,ஈரூடகவாழிகள், ஊர்வன என்பனவும் ஈரநிலங்களுக்கு உரியனவாகும். ஈரநிலங்கள் சுற்றுலாப் பறவைகளுக்கும் தற்காலிக இருப்பிடமாக உள்ளன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஈர நிலங்கள் மனிதனுக்கு பல்வேறு வழிகளில் பயன்பட்டு வருகின்றன. இவை சில வேளைகளில் மனிதனுக்கு நேரடியாக பயன்பட்டு வருகின்ற அதேவேளை மறைமுகமாகவும் சில சமயங்களில் பயன்பட்டு வருகின்றன. பொதுவாக ஈரநிலங்களின் பயன்பாட்டினை இரண்டு வகையாக பிரித்து நோக்கலாம்.

(மிகுதி நாளை)

# மக்கள் தலைவர் தேர்தலில் வெல்ல கட்சியில் பதவிகள் தேவையில்லை

## கூறுகிறார் பிரதமர் மஹிந்த



கொழும்பு, பெப். 02

மக்களுக்காக உழைக்கும் தலைவருக்கு தேர்தலில் வெற்றி பெற கட்சிப் பதவிகள் தேவையில்லையெனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடளாவிய ரீதியில் வீடற்றவர்களுக்கு வீடுகளை வழங்கும் திட்டத்தின் முதலாவது வேலைத்திட்டத்தினை இன்று ஆரம்பித்து இருக்கின்றோம். அதற்கான நிதியையும் வழங்கவுள்ளோம்.

அதாவது கிராமங்களுக்கு சென்று பார்க்கும்போது அங்கு காணப்படுகின்ற வீடுகள் வசதியற்ற முறையில் காணப்படுகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

நாம் கடந்த அரசைப் போன்று இவ்விடயங்களுக்கு நான்கு வருடங்களைப் பயன்படுத்தாமல் ஒரு வருடத்தில் நிறைவு செய்யும் வகையிலேயே இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க இருக்கின்றோம்.

அதாவது இந்த வருடம் நிறைவடைவதற்குள் இந்த வீட்டுத்திட்டத்தை அமைத்து மக்களிடம் கையளிப்போம். இந்த வேலைத்திட்டத்துக்குள் சிங்களம், முஸ்லிம், தமிழ் என வேறுபாடுகள் காட்டப்படமாட்டாது.

அத்துடன் இவர்கள் பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக்கட்சி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என அவதானித்துப் பாகுபாடு காட்டமாட்டோம்.

நாம் ஆட்சிக்கு வந்துவிட்டோம் என்ற காரணத்திற்காக இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவில்லை.

அதேபோன்று அரசியலில் பிரவேசிக்க வேண்டுமென்பற்காக செய்யும் வியாபார வேலைத்திட்டமும் அல்ல இது.

சிறந்த வேலைத்திட்டத்தினை முன்னெடுக்க அடுத்து நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, 2/3 பெருமான்மையை பெறவேண்டியதே தற்போதைய எங்களது தேவைப்பாடாக இருக்கின்றது.

இலங்கை வரலாற்றில் இதுவரை காலமும் நிகழாத ஒரு சம்பவம்தான் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் பதவிக்காக ஒருவருக்கு ஒருவர் மோதுண்டு கொண்டு இருப்பதாகும்.

அதாவது ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் பதவிக்காக ஒரு கூட்டம் நடத்தப்பட்டமையையும் இலங்கை இதிகாசங்களில் இதுவரை காலமும் காணவில்லை.

தற்போது ஐக்கிய தேசியக்கட்சி பிளவடைந்து காணப்படுகிறது. மேலும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தலைவர் பதவி அவசியமில்லை.

அத்துடன், நான் நாட்டின் ஜனாதிபதியாக வரும்போது கட்சியின் தலைவராக இருக்கவில்லை. மாறாக ஜனாதிபதியானதன் பின்னரே அந்தப் பதவி எனக்கு கிடைத்தது.

அதாவது மக்களுக்காக உழைக்கும் தலைவருக்கு தேர்தலில் வெற்றி பெற கட்சிப் பதவிகள் தேவையில்லை – என்றார். (ஐ)

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656
தொலைபேசி இல. 021 222 4353 021 492 3200 071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம் 226, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.02.2020 இல் வெளியிடப்பெற்றது.